விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 மார்கழி 7 ரபி-ஆகி 9 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (22—12—85) இதழ் 315

## "தமிழ்த் தீவிரவாதிகளின் துப்பாக்கிகள், குண்டுகளுக்கு பணியமாட்டேன்!"

ஜே. ஆர்.

[கொழும்பு]

தமிழ்த் தீவிரவாதிகளின் துப்பாக்கிகளுக்கும், குண்டுகளுக்கும்பணிந்துபோக நான்தயாராகஇல்லை என்றுஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார். சுகததாஸ உள்விளையாட்டரங்கில் நேற்றுக் காலை நடைபெற்ற ஐ. தே. கட்சியின் 39வது வருடாந்தக்கூட்டத்தில் [12-ம் பக்கம் பார்க்க]

- சுதுமலை - தாவடியில் பெரும் ஆகாய முற்றுகை
- தரையிலும் வானிலும் பலத்த குண்டுமுழக்கம்

# ஹெலிகாப்டர்களில் வந்தோர் போராளிகளுடன் நேரடி மோதல்!

(ஏ. வி. மாணிக்கம்)

**சுதுமலை - தாவடிப் பகுதிகள் நேற்று அதிகாலை பெரும் ஆகாயமுற்றுகைக்குள்ளாயின. நான்கு ஹெலிகாப்டர்களில் வந்திறங்கிய ஆயுதப்படையினர் தீவிரவாதிகளின் முகாமொன்றை முற்றுகையிடுவதில் மும்மரமாக இருந்தனர். அப்போது தமிழ்ப் போராளிகளுக்கும், அவர்களுக்குமிடையே சுமார் மூன்றுமணி நேரம் கடும் நேரடிமோதல் இடம்பெற்றது.**

தமிழ்த் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை முற்றுகையிடுவதற்கு ஹெலிகொப்டர்கள் மூலம் வந்திறங்கிய ஆயுதப் படையினருக்கும் தமிழ் தீவிரவாதிகளுக்குமிடையே கடுமையாக இடம்பெற்ற நேரடி மோதலின்பின்னர், ஆயுதப் படையினர் முன்னேறமுடியாமல் பின்வாங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 5-30 மணி தொடக்கம் காலை 9-00 மணிவரை சுமார் 3 மணி நேரம் ஆயுதப்படையினருக்கும் தமிழ் தீவிரவாதிகளுக்குமிடையேயான இப் போராட்டம் இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுஅதிகாலைஒன்றன்பின் ஒன்றாக 4 ஹெலிகாப்டர்கள் சுதுமலை தாவடி இணுவில் பகுதியை முற்றுகையிட்டன. மூன்றிலிருந்து சுமார் 5 அடி உயரத்தில் இணுவில் பாலாவோடை தோட்டவெளியில் ஆயுதப்படையினர் 'திடு திப்' என்று நிலத்தில் குதிக்கத் தொடங்கினர்.

மூன்று ஹெலிகொப்டர்களிலிருந்தும் ஆயுதப்படையினர் இவ்வாறு குதித்ததும் அவற்றுள் இரண்டு மீண்டும் மேலெழுந்து சென்றுவிட்டன.

ஹெலிகாப்டரிலிருந்து இறங்கிய சுமார் 60-70க்குமிடையிலான ஆயுதப்படையினர் தமிழ்த் தீவிரவாதிகளின் முகாமை நோக்கி இராணுவ உடையில் கைவிலங்கிடப்பட்ட ஓர் உருவத்துடன் சென்றுகொண்டிருந்த பொழுது திருவெம்பாவைப் பூஜைக்கு சென்ற பெண்களிடம் குறிப்பிட்ட முகாம் எங்கே என்று விசாரித்தனர்.

சுமார் ஒரு மைல் தூரம் குறிப்பிட்ட முகாமுக்குச்செல்லும் பாதையில் ஆயுதப்படையினர் முன்னேறிக்கொண்டிருந்தனர்.

மானிப்பாய் இணுவில், சுதுமலை தாவடிப்பகுதிகள், ஹெலிகாப்டர்களிலிருந்து புறப்பட்ட துப்பாக்கி வெட்டுக்களால் கதிகலங்கின.

ஆயுதப்படையினர் தேடிச் சென்றது "தமிழீழ விடுதலைப் புலி"களின் முகாம் என்று கூறப்படுகிறது.

தமிழ்த் தீவிரவாதிகளின் முகாமிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் ஆயுதப்படையினர் முன்னேறி வந்துகொண்டிருந்தபோது, தீவிரவாதிகளுக்கும் அவர்களுக்குமிடையே கடுஞ்சமர் நிகழ்ந்தது. இருதரப்பினரும் துப்பாக்கிகளாலும், ரொக்கட்டுக்களாலும் பரஸ்பரம் தாக்கினர்.

ஹெலிகாப்டர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தன. தரையிலிருந்து ரொக்கட்டுக்கள் அவைமீது ஏவப்பட்டன.

சுமார் நான்குமணித்தியாலங்களின் பின்னர் ஆயுதப் படையினர் தமது இலக்கை நெருங்க முடியாமல் பின்வாங்கித் தங்கள் ஹெலிகாப்டர்கள் நிறுத்திவைக்கப்பட்ட இடத்தை நோக்கிநகர்ந்தனர்.

9 மணியளவில்ஹெலிகொப்டர்களில் ஏறி பலாலி முகாமுக்கு சென்றுவிட்டனர்.

[12-ம் பக்கம் பார்க்க]

## உருக்கமான வேண்டுகோள்

[கொழும்பு]

கடந்த வாரம் மடுப்பகுதியில் வைத்து கடத்திச் சென்ற 7 மடு யாத்திரீகர்களை விடுதலைசெய்யும்படி அவர்களின் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

மடுத் திருப்பதி யாத்திரையைமுடித்துக்கொண்டு வீடு திரும்பியபோதே அந்த ஏழு பேரும் கடத்தப்பட்டனர்.

நத்தார் பண்டிகை நெருங்குகிறது. கடத்தப்பட்டவர்கள் எமது குடும்பத் தலைவர்கள்; அவர்களைக் காணாது அவர்கள்பிள்ளைகள் மற்றும் மனைவிமார், சகோதரர்கள் செய்வதறியாது தவிக்கிறோம். இந்த ஒளித் திருநாளில் அவர்கள் எம்மிடம் மீண்டும் வராவிட்டால் எமது வாழ்வே இருண்டுவிடும், கடத்தப்பட்டவர்கள் அப்பாவிகள். எனவே அவர்களை விடுதலை செய்து எமது வாழ்வில் ஒளியேற்றும்படி சம்பந்தப்பட்டவர்களை தாழ்மையாக வேண்டுகிறோம் என்று கேட்டுள்ளனர். (கி)

### ஆகாயத் தாக்குதல்:

## 10 பேர்வரை காயம் இரு பெண்கள் அனுமதி!

[கா. யோகநாதன்]

"ஹெலிகாப்டர் மேலே பறந்துகொண்டிருந்தபோது, அப்பகுதி எங்கும் சாரமாரியாக துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. பயத்திலை நான் வீட்டுச்சுவருக்கு அருகில் நின்றபோது, மேலிருந்துவந்த குண்டு ஒன்று வீட்டுக்கூரையின் ஊடாக உள்ளேவந்து என்னைத்தாக்கியதால் காயம் ஏற்பட்டது.

மானிப்பாயில் நேற்றுக் காலைநடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்து (12-ம் பக்கம் பார்க்க)

## நான்கு பேர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

இதுதவிர யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று ஆயுதப்படையினர் ஹெலிகாப்டரில் பறந்து ஆயுதப்படையினர் குண்டுகளை வீசி தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று அதிகாலை திருவெம்பாவை பூஜையைத் தரிசிக்க கோவிலுக்கு சென்றுகொண்டிருந்த சிறுவர்களும் சிறுமிகளும் ஆண்களும், பெண்களும் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்சென்றனர். இரு சிறுமி உட்பட நான்கு பேர் பலியானார்கள். பத்துப் பேருக்குமேல் படுகாயமுற்றனர்,

காலையில் அத்தியாவசிய சேவைக்கு வாகனங்களில் சென்றுகொண்டிருந்தவர்களும் ஹெலிகாப்டர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்கள்.

நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் துப்பாக்கிச்சூடு (12-ம் பக்கம்பார்க்க)

## விரிவான ஆகாயத்தாக்குதல் ஈழம் வானொலி எச்சரிக்கை!

[கொழும்பு]

பரந்த அளவிலான விமானத் தாக்குதல்கள் யாழ். குடாநாட்டுப் பகுதியில் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. எனவே வடபகுதி மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று சென்னையில் விடுத்த அறிவிப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை ஈ. பி. ஆர். எல். எவ்.வின் ஈழம் வானொலி செய்தியிலும் நேற்று வெளியிடப்பட்டது.

விரிவான விதத்தில் இலங்கைப் பாதுகாப்புப்படைகள் வடபகுதியில் விமானத் தாக்குதல்களுக்குத் தயாராகின்றன. இதன் ஆரம்பக்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை 20-ந் திகதி அரியாலைப் பகுதியிலும் 21-ந் திகதி சுதுமலைப்பகுதிகளிலும் இடம்பெற்ற ஹெலிகாப்டர் முற்றுகைகள் அமைந்துள்ளன.

இந்த அபாயகரமானவேளையில் பொதுமக்கள் வீதிகளில், மற்றும் வெளிகளில் கண்டபடி நடமாடித் திரியவேண்டாமெனக் கேட்கப்படுகின்றனர்.

கடந்தகாலங்களில் கிழக்கு மாகாணப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆகாய மார்க்கமான தாக்குதல்பணியைப் பின்பற்றியே வடபகுதியிலும் தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று 'ஈழ வானொலி' எச்சரித்துள்ளது. (கி)

### நீண்ட நாட்களின்பின்

## இந்தியமீனவர்மீது தாக்குதல் இறாலும் பறிமுதல்!

[சென்னை]

இலங்கை கடற்படையினரால் ஒரு படகோட்டி உட்பட ஐந்து இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

கச்சதீவுக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேற்படி மீனவர்கள் பலத்தகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான 15 கிலோகிராம் இறாலும் இலங்கை கடற்படையினரால் கொள்ளையிடப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர கடந்த வியாழக்கிழமை மேலும் இரு இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக்கருகில் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

## புத்தளத்தில் படகுகள் இயந்திரங்கள் கொள்ளை!

(கொழும்பு)

புத்தளம்பகுதியில் கடந்த 10ந் திகதி வெள்ளிக்கிழமை மீன்பிடிப்படகுகளும், அவற்றுக்கான மோட்டர் இயந்திரங்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

தமிழ்த் தீவிரவாத இயக்கத்தினரே இக்கொள்ளையை நடத்தியுள்ளதாக பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடற்கரையோரங்களிலேயே இப்படகுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனவென்று தெரிவிக்கப்பட்டது. இப்படகுகள் இயந்திரங்களின் பெறுமதி லட்சக்கணக்கான ரூபாய்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. [கி]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வலம்புரி சங்கு: உயர்ஜாதி வலம்புரிச் சங்கு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆயர்பாடி, மடத்தடி, கே. கே. எஸ் வீதி, தெல்லிப்பழை. [2454]

குளிர்சாதனப்பெட்டி, வீட்டுத் தளபாடங்கள், சாப்பாட்டுமேசைகள், கதிரைகள், கட்டில்கள், அலுமாரிகள், செட்டிகள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், இங்கிலீஸ் பாத்திரங்கள், டினர்செட்கள், பாவித்த இரும்பு கேட் ஆகியன உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆனந்தன், கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் உள்ள சந்திரா சலூனுக்கு பக்கத்திலுள்ள சாந்தினி இல்லத்தில் பார்வையிடலாம். [2474]

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள், Nel Farm சேவற் குஞ்சுகள் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [247']

திருநெல்வேலி கறுப்பின கத்தரிக் கண்டு விற்பனைக்குண்டு. மூ. குமாரசாமி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. [2501]

அல்சேசன் நாய்க்குட்டிகள் (Pure bread Alsation), குளிர்சாதனப் பெட்டிகள், தளபாடங்கள், தையல் மெசின், துவிச்சக்கர வண்டி (Chopper), கஸற் றேடியோக்கள், கலர் T. V., மருத்துவப் புத்தகங்கள், கம்பளங்கள், துணிவகைகள், வெளிநாட்டு கிளாஸ் வகைகள், மற்றும் பலபொருட்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், C/o திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும்இடையில் உள்ளது). [2494]

(கற்பூர மெசின்) கற்பூர வில்லைகள் தயாரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 188, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. [2479]

கிறசர்க் கற்கள், தீராந்தி, பலகை வகைகள் சகாய விலையில் விற்பனைக்குண்டு. சகுந்தலாதேவி மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை. [2504]

Akai Brand New வீடியோ கஸட் பிளேயர் மாத்திரம் VS—PI EV (கொம்பியுட்டர் கொன்ரோல் சிஸ்ரம்). யாழ். சென்றல் கிளினிக், 180, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2549

வீடு கட்டக்கூடிய இரண்டு பரப்புக்காணி பிரயோசனங்களுடன் சிந்தங்கேணி சந்திக்கு அருகாமையில் பண்டத்தரிப்பு வீதியில் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: ந. இராஜலிங்கம், கராஜ் ஒழுங்கை, பழைய வீதி, கோப்பாய், 2552

குறைந்த விலையில் Sisil Deep Freezer குளிர்ச்சாதனப் பெட்டியும் 27'' டெலிவிஷன் பிலிப்ஸ் திருத்திப் பாவிக்கக் கூடிய நிலையில் விற்பனைக் குண்டு. ராதா 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 2510

வவனியா நகரசபை எல்லைக்குள் மன்னார் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அரிசி ஆலை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ் கே. எ. எட்வேட், வேப்பங்குளம், வவனியா 2365

## விற்பனைக்கு

பிறவண் வீதி 1-ம் ஒழுங்கையில் வீடு வளவு விற்பனைக் குண்டு. தொடர்பு: விளம்பர இல. 2151, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், [2151]

பலவர்ணத்தில் லவ் பேட்ஸ் பறவைகள் பெற்றுக்கொள்ளலாம். இடம்: கந்தசாமி அன் சன்; நல்லூர், மார்கட் சந்தி. [2514]

## தேவை

பெண் லிகிதர்கள் வயது 23-35. தகைமை G. C. E. O/L தமிழில் விஷேடசித்தி பெற்றவராக இருக்கவேண்டும் 27-12-85 முன்புவிண்ணப்பிக்கவும் விளம்பர இல. 2554 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2554

யாழ்ப்பாணம் நவீனசந்தையில் அமைந்திருக்கும் தரன் ஸ்ரூடியோவில் கடமையாற்றுவதற்கு பெண் காசாளரும்; பெண் பயிற்சியாளர்களுக்கும் வெற்றிடமுண்டு. யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. தரன் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். போன்: 23858 2557

பெண் பயிற்சியாளர் தேவை. பாடல்கள் பதிவு செய்வதற்கும், லிகிதராகக் (Bill Clerk) கடமையாற்றுவதற்கும் பயிற்சிச் சம்பளம் வழங்கப்படும். நேரடித் தொடர்புகொள்ளவும் கமலாவாச் வேக்ஸ் அன் (Recording Bar) ''றெக்கோடிங் பார்'', மெயின் வீதி, காங்கேசன் துறை. 2440

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம், நீர் முதலிய வசதிகளோடு ஐந்து அறைகளுக்குக் குறையாத விசாலமான வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. 2533 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2533

விற்பனையாளராக பணிபுரிய புத்தக விற்பனை அனுபவமுள்ள படித்த யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பையன் தேவை. நற்சான்று பத்திரத்துடன்தொடர்பு கொள்ளவும், ஞானசுரபி புத்தகக் கொம்பனி 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2534

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைப்பாறிய கணவன் மனைவிக் யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அதற்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகொள்ளவும். விளம்பர இல, 2535 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2535

## தவறிவிட்டது

இல: 481150205V மயில்வாகனம் தணிகாசலம் ஏழாலை என்பவருடைய அடையாள அட்டை வேறு சில தஸ்தாவேஸ்களுடன் 20/12/85 அன்றுசுன்னகத்திற்கும்பலாலி வீதி கோண்டாவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சிவாஜினி வைத்தியசாலை, பலாலி வீதி, கோண்டாவில் அல்லது கிறிகிட்டி ஒழுங்கை, ஏழாலை மேற்கு. சுன்னகம். 25''

## மணப்பந்தல்

லண்டனில் சிவில் எஞ்சினியராகக் கடமையாற்றும் 33 வயதுடைய மணமகனுக்கு 26 வயதுக்குட்பட்ட எக்கவுண்டன் அல்லது I. C. M. A. பட்டதாரியாக உள்ள மணமகள் விரும்பத்தக்கது. இரண்டு வாரத்துக்குள் தொடர்பு கொள்ளவும். மூ. க. சின்னையா, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 2532

## வகுப்புகள்

ஆங்கிலம் பேசஎழுதவாசிக்க புதிய இலகுமுறை வீட்டில் வந்து படிப்பித்துத் தரப்படும். மற்றும் பாடங்களும் 10ம் தரம் வரை. எஸ். விஜயானந்தன், கல்வளை, சண்டிலிப்பாய். [2537]

G. C. E. (A/L), (O/L) இரசாயனம், தூயபிரயோக கணிதம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், 6 தொடக்கம் 10ம் வகுப்பு வரை கற்பிக்கப்படும். ஆசிரியர்கள் B. A., B. Sc. (Ceylon). 85, சிவன்கோவிலடி. திருநெல்வேலி. 2536

## கல்வி

பெண்களுக்கு எலெற்ரோனிக் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பிரபல கல்வி நிலையம் ஒன்று புலமைப் பரிசுகளை வழங்குகிறது. இவர்கள் A/L விஞ்ஞானம் படித்தவர்களாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2541 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 2541

G.C.E.(O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், 17வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்காக நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O/L), (A/L) சகல பாடங்களும் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்களினால் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, or கபிலேஸ் ஜுவெல்லர்ஸ், 280, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2553

காரைநகர்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

காரைநகர்

### வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திர மூலம் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. சாக்குகளைப் பெறவிரும்புவோர் ரூபா 250/- ஒப்பந்த முற்பணமாக வைப்புசெய்து தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று 31-12-85 நண்பகல் 12 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,

ப. நோ. கூ. சங்கம்,

காரைநகர்.

[2556]

## FOR SALE

Pyrexware, Autumn Glory design. Cups and Saucers, Plates, Casseroles, etc, Duralex unbreatable glass ware, Other imported gift items. Vemake 27/3, Power House Road Jaffna. 2503

## WANTED

Female - Secretaries Age 25-28 Qualification: G.C.E O/L Knowledge of English Language essential. Apply. before 27th Dec. 1985 Advt: No: 2555 C/o Eelanadu Jaffna. 2555

## தேவை

சைவ-அசைவ உணவு சமையல் வேலைகளில் அனுபவம் உள்ள, நற்குண, நல்லொழுக்கமுடைய ஐம்பது வயதான ஒருவர் கண்ணியமான ஓர் இடத்தில் வேலையை எதிர்பார்க்கிறார். விளம்பர இல. 2524, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2524]

கட்டடங்கள் உடைத்த கற்கள், ரோட்டுப்போடவும் மற்றும் பல தேவைகளுக்கும் உகந்தவை. முக்கால் கியூப் விலை ரூபா 50/- யூனிபோ - UNIFO பலாலிவீதி, உரும்பிராய். 2437

## முகவரி மாற்றம்

எமது காரியாலயம் கீழ் உள்ள புதிய முகவரியில் இயங்கி வருகின்றது.

NCC

Northern Construction Consortium Private Limited

**Architects & Construction Engineers,**

கட்டிடக் கலைஞர்களும் நிர்மாணப் பொறியியலாளர்களும்,

15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

2547

## விற்பனைக்கு

நல்ல சுற்றுடலில், பல்கலைக்கழகத்திற்கு முன்பாக (திருநெல்வேலி) பாதுகாப்பான சுற்றுடலில் அமைந்துள்ள வீடு கட்ட வசதியான $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இத்துடன் வயலின், ஆர்மோனியம், பியானோ, Honda 125 Motor Bicke விற்பனைக்குண்டு.

## தேவைகள்

ஆங்கில, தமிழ் தட்டச்சுக்கள், கதிரை மேசைகள்.

## WANTED

Tutors for German and French Please apply.

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.
T' phone: 24355.

## RADIO and T V ELECTRONIC ENGINEERING COURSE

WITH PRACTICALS

Only 1200/- for both - 9 Months.

தராதரம் பெற்ற தொழில்நுட்ப வல்லுனர்களின் சேவை உங்களுக்கு கிடைக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

மேலும் உங்கள் வானொலி T. V. Antenna Booster போன்ற சகலவிதமான இலத்திரனியல் சாதனங்கள் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, சென் பீற்றர்ஸ் லேன்,
(அடைக்கலமாதா கோவில் முன்பாக)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
(Oppsite O. L. R. Church)
Hospital Road,
Jaffna.

T' phone: 24355

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR




# சுவிஸ் விமானங்கள் சிறகு விரித்த வேளை..

"சுவிஸ்ஸிலுள்ள இலங்கைத் தமிழர்களைத் தாயகம் ஏற்றிச்செல்ல சுவிஸ் விமானங்கள் தயாராகவுள்ளன'' என்று சுவிஸ் தொலைக்காட்சியில் டிசம்பர் முதலாந் திகதி ஒரு அறிவிப்பு.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குப் பொறுப்பான சுவிஸ் திணைக்களத்தின் தலைவி எலிசபெத் கொப் என்பவரே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுப்பேற்ற இத் திணைக்களமே கைவிரித்து விட்ட நிலையில் செய்வதறியாது நம்மவர்கள் பதைத்தனர்.

சுவிஸ் அரசின்இந்த முடிவை ஆதரித்து பல பத்திரிகைகளும் கொட்டை எழுத்துக்களில் தலையங்கங்களை எழுதின.

இவற்றைப்படித்தபோது நம்மவரின் மனக்கலவரம் பன்மடங்கானது. எதனையும் செய்யமுடியாதநிலை.

''தமிழர்கள் உழைப்பைத் தேடியே சுவிஸ் வந்துள்ளனர். அவர்களுக்கு தாயகத்தில் பிரச்னை இல்லை'' என்று அந்த எலிசபெத் அம்மையார் மேலும் எம்மவர் வேதனையைக் கிளறிவிட்டிருந்தார்.

இந்த இக்கட்டான வேளையிலேய சுவிஸ் தமிழர் துயர் நீக்க லண்டனில் இருந்து ஒருவர் பறந்தோடி வந்தார். வேறுயாருமல்ல; 'அமிர் அண்ணை' என்று நம்மவர் மிக நெருக்கமாக அழைத்த திரு. அ. அமிர்தலிங்கமே அவராவார்.

ஒரு பொறுப்புள்ள மூத்த சகோதரர் போலவே அவர் நடந்து கொண்டார். கடந்த 9ந் திகதி சுவிஸ் வந்த அவர். சுவிஸ்பாராளுமன்றம் முதல் ஏனைய அதிகார பீடங்கள் அனைத்தையும் சந்தித்து நம்மவர் நிலைமை விளக்கினார்.

திரு. அமிர்தலிங்கத்தின் வருகை சுவிஸ் செய்தியாளர்களுக்கு 'விருந்து' படைத்தது. தொலைக்காட்சி பத்திரிகைளில் தொடர்ச்சியான பேட்டிகள்.

'இலங்கையில் ஒவ்வொரு தமிழ் ஆண் மகனும் எப்படி நடத்தப்படுகிறான் என்பதை ஒளிவு மறைவின்றி அதேவேளை கச்சிதமாக அமிர் விளக்கினார். இன்றைய சூழ்நிலையில் சுவிஸ்ஸிலுள்ள இலங்கைத்தமிழர்களை நாடு கடத்தினால் ஏற்படும் விளைவு, குறித்து தகுந்த வகையில் விபரித்தார். கூடவே இந்தியாவின் உதவியுடன் நல்ல சூழ்நிலை ஏற்படுமானால் இலங்கைத் தமிழர்கள் ஒரு தீர்வை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விளைவு...?

எலிபெத் கொப் அம்மையாரின் அறிவிப்பில் ஒருமாற்றம். இலங்கைத் தமிழர்கள் வெளியேற்றம உடனடியாக இடம்பெருது. அடுத்த புதிய ஆண்டின் முதல் கிழமையிலிருந்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

'அப்பாடா' என்று எம்மவரிடையே நீண்டபெருமூச்சு.

திரு. அமிர்தலிங்கத்தின் வருகை சுவிஸ் இலங்கைத் தமிழர் அடிமனதில் பால் வார்த்துவிட்டிருந்தது. அன்று திரு. அமிர்தலிங்கத்தைப் போல ஒருவர் முன்வந்திராவிட்டால் வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறிய கதையாகத்தான் நம்மவர் கதை முடிந்திருக்கும்.

இலங்கைத்தமிழரை வெளியேற்றும் முடிவு ஒத்திவைக்கப்பட்டது. ஒருஆறுதல் தரும் நடவடிக்கை என்று கூறுவதைவிட அமிரின் உயாந்த அரசியல் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூறவேண்டும்.

சுவிஸ்ஸிலிருந்து
**ஜெயகாந்த்**

இலங்கைத்தமிழர்கள் சார்பில் பேச வந்த ஒரு சக தமிழ் மகனை திரு. அ. அமிர்தலிங்கத்தை சுவிஸ் பாராளுமன்றம் கௌரவித்து இராப்போசனம் வழங்கியதிலிருந்து அவரின் நடவடிக்கை எவ்வளவு தூரம் சுவிஸ்காரர்களைக் கவர்ந்திருந்ததென்பதை அறியமுடிகின்றது.

சுவிஸ் அரசாங்கம் இலங்கைத்தமிழரை நாட்டைவிட்டு வெளியேற்ற முடிவு செய்திருந்தபோதிலும் அங்குள்ள பல ஸ்தாபனங்கள் மற்றும் பிரமுகர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே வருகின்றனர். இவர்கள் எம்மவர் நிலையை நன்கறிந்தவர்கள். சில பத்திரிகைகள் கூட அனுதாபங்களை வெளியிட்டு எம்மவர்களுக்காகப் பரிந்துரைந்தன.

ஒரு சுவிஸ் உதவிக் குழு ஒன்று'24 மணித்தியாலங்கள்' என்ற பத்திரிகையில் ரூபா 60 ஆயிரம் செலவு செய்து (Commie Sos Asilevaud) இலங்கைத் தமிழர்களை வெளியேற்ற வேண்டாமென விளம்பரஞ் செய்திருந்தது.

இது தவிர சுவிஸ் - ஜெர்மன் பகுதியிலுள்ள டாக்டர் கபர், சுவிஸ் பிரெஞ்சுப்பகுதியிலுள்ள மாரிகிளெயர் கூலோகொப் என்ற பெண்மணி ஆகியோர் வரிந்து கட்டிக்கொண்டு நம்மவர்களுக்காக கடுமையாக உழைக்கின்றனர்.

இவ்வாறு எம்மவர் சுவிஸ்ஸில் அமைதியாகக் காலூன்றப் பகீரதப் பிரயத்தனங்கள் மேற் கொள்ளப்படும் வேளை இவற்றைத் தவிடு பொடியாக்கும் 'வானரக் கும்பல்'களும் எம்மிடையே இருக்கத்தான் செய்கின்றன.

இக்கும்பல்களாலேயே சுவிஸ்ஸில் மட்டுமல்லாது ஐரோப்பாவில் தமிழர்கள் குடியேறியுள்ள அனைத்து நாடுகளிலும் அவர்களுக்கு தலையிடி ஏட்பட்டுள்ளது.

'போதைவஸ்த்து';எம்மவர் பாஷையில் கூறுவதானுல் 'பொடி பிஸினஸ்' அல்லது 'தூள் வியாபாரம்' செய்வதில் எமது ஆட்கள் பலர் மும்முரமாகியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியர்கள் எதையும் பொறுப்பார்கள்; ஆனுல் இந்த 'பிஸினஸ்' காரர்களை மட்டும் அவர்கள் ஒரு போதும் மன்னித்துவிடமாட்டார்கள்.

சுவிஸ் சிறைகளில் மட்டும் நம்மவர்களில் 30 பேர் அடைபட்டுள்ளனர், 'பிரான்ஸ்-சுவிஸ்' மார்க்கமாக பெரும் போதைவஸ்து தொடர்புகளை இவர்கள் வைத்திருந்தனராம். குற்றவா

(10-ம் பக்கம் பார்க்க)

## அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே...



உரிமைக்காகப் போராடிச் சிறைவாசம் பெற்ற சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் நால்வர் சிறைக்கட்டிடத்தின் வெளியே வந்து புகைப்படம் பிடித்துக் கொண்டனர். படத்தில் காணப்படும் அந்நால்வர் விபரம் [இடமிருந்து வலமாக] வருமாறு: திரு. பிலிப் குணவர்த்தனு, கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வா, கலாநிதி என். எம். பெரேரா திரு. எட்மண்ட் சமரக்கொடி.

## 'உய்வார்கள் உய்ய எய்யாமற் காப்பாய்'

பொன்னு லையில்வதியும் பெரிய திருவரத்தாய்!
உன்னுலே ஆகாத தொன்றுண்டோ?- ஒன்னுரைப்
பூண்டோடழித்துனது பொன்னடிக்கீழ் வாழும்எமை
ஆண்டவனே! காத்தருளு வாய்!

உயிரை, உடைமைகளை, உறைவிடத்தை இங்கிருக்கும்
''பயிரை மேய்வேலி!''படர்ந்தழிக்க - மயிரிழையில்
தொங்குகின்ற வாழ்வின் துயர்தாங்க மாட்டாமல்
எங்கும் ''அகதிகள்நாம்!'' ஈசா!

கன்னியரை,அன்னையரைக், கற்பழித்து எம்மினத்தின்
தொன்மைபெறும் மானத்தைச் சோதிக்கும் - அந்நியனுய்!
இம்மண்ணில் கால்கொள்ளாதோடிவிடச் செய்யவலு
பொன்னுலையாய்!எமக்குத் தா.

—அல்லை வ. க. ஆறுமுகம்

[பொன்னுலை ஸ்ரீ ரெதராசப் பெருமாள் கோவில் மார்கழி மகோற்சவகால நினைவில் தோன்றியவை]




## இதயங்களிலே ஏசு பிறந்தாரே

கட்டிய மாடி வீடுகளெல்லாம்
கற்குகை ஆனதெடா - மாட்டுக்
கொட்டில் தானே தெய்வம் வாழும்
கோயில் ஆனதெடா

சிந்தனை செய்யும் மனிதர்களெல்லாம்
நிந்தனை செய்கின்ருர் - தேவ
மைந்தனை அந்த இடையர்கள் தானே
வந்தனை செய்கின்ருர்.

தாழ்த்தப்பட்டவர் வாழ்த்தைப் பெற்றவன்
தாரணி மீட்பனெடா - இங்கு
தாழ்ந்தவர் தானே உயர்ந்திடுவார் எனும்
தத்துவ பாடமெடா

பெத்தலகேமில் அன்று பிறந்த
பெருமான் யேசுபிரான்
இத்தரை மாந்தர் இதயங்களிலே
இன்று பிறந்தாரே.

ஆயர்களான தூயவர் காண
அன்று பிறந்தாரே - இன்று
நேயர்களான யாவரிடத்தும்
நினைவாய் வருவாரே.

இறைவன் என்ருலும் ஏழை என்றே தான்
ஏசு பிறந்தாரே - இன்று
வறியவர் வாழும் குடிசைகள் தோறும்
வந்து பிறப்பாரே.

- சத்சித்ஆனந்த்

# ஜெனுட்டன்ஸ்



## உயர்ரக உருக்குத்

தளபாட (STEEL) உற்பத்தியின்

## முன்னேடிகள்!



புதிய அமைப்பில் உறுதியும் உத்தரவாதமும் கொண்ட
உங்கள் வீட்டுத்தளபாடங்கள்

- சாப்பாட்டுக் கதிரைகள்
- மேசைகள்
- ரீ. வி. ஸ்ராண்ட்கள்



- விருந்தைக் கதிரைகள்
- கட்டில்கள்
- செற்றிகள்


★ நீண்ட பாவனைக்கு நீடித்துஉழைக்கக்கூடிய காரியாலய (Office) தளபாடங்கள்,வாடகைக் கதிரைகள்


ஆஸ்பத்திரிக் கட்டில்கள்
Hospital Beds

★ இறக்குமதித் தரத்திலான விசேட உருவமைப்பில் உருவாக்கப்பட்ட சுழல் கதிரைகள்

Revolving Chairs

★ வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு எமது உற்பத்திப் பொருள்கள் அனைத்திலும் எமது சின்னம் இடப்பட்டுள்ளது (JANARDEN'S) யாழ்நகரில் விற்பனை முகவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.







உள்ளூர் உற்பத்தியின் வெற்றியில் ஒரு மைல்கல்!

தொழிற்சாலை

# JANARDEN'S INDUSTRIES


(MANUFACTURERS OF QUALITY STEEL FURNITURES)

K. K S. ROAD, INUVIL.

## கந்தவேள் கோட்டம்: முன்னிகழ்வுச் சுருக்கம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது அரசனுன சிங்கையாரியச் சக்கரவாத்தியின் முதலமைச்சராக விளங்கிய புவனேசவாகுவால் நல்லூரில் கந்தசுவாமி ஆலயம் முதன் முதல் கி. பி. 1248 இல் அமைக்கப்பட்டது. கி. பி. 1450இல் தென்னிலங்கை ஸ்ரீ ஜயவர்த்தன புரக்கோட்டை மன்னன் பராக்கிரமபாகு தனது தத்த புத்திரன் சப்புமல்குமரயா என்ற செண்பகப்பெருமாளை யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி வெற்றி கொள்ள அனுப்புகிறுன். அப்படையெடுப்பில் அழிவுறும் கிராமங்கள், கட்டிடங்களுள் ஒன்ருக நல்லூர்கந்தசுவாமி ஆலயமும் அமைகிறது. ஆலயத்தை அழித்தமைக்குப் பரிகாரமாக முத்திரைச்சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம் இருக்கின்ற விடத்தில் பொய ஆலயம் ஒன்றினை அவன் எடுப்பித்தான்; சிறீசங்க போதி புவனேகபாகு எனப்பின்னர் பெயர் பெற்ருன். அந்த ஆலயத்தைகி. பி. 1621இல் பிலிப்தே ஒலிவேருஎன்றபோத்துக்கேயப் பறங்கிகளின் படைத்தளபதி, அத்திடாரத்தோடுகிளறித்தரைமட்டமாக்குகிருன். அதன் பின்னர்-

# கந்தவேள் கோட்டம்




## பகுதி - 3
## காத்தல்

1720ஆம் ஆண்டு ஒரு பனிக்குளிர்க்காலை.

சைவமக்களின் பெரிய ஆலயமாக விளங்கிய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப்போர்த்துக்கேயப் பறங்கிகள் அழித்துத் தரைமட்டமாக்கி ஒரு நூற்ருண்டு காலம் கழிந்து விட்டது. ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு கந்தவேள் கோட்டம் அமைந்திருந்த அப்புனித விடத்தில் வானளாவிஉயர்ந்து கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்று காணப்பட்டது. பனிப்புகாரூடே வெண்சுண்ணம் பூசப்பட்ட அக் கிறிஸ்தவ கோயில் நிழலுருவமாகத் தோற்றம் தருவதை சுப்பையர் கிருஷ்ணையர் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்.

அவர் கண்களுக்கு நூற்ருண்டுகளுக்கு முன் அவ்விடத்தில் சைவத்தின் மகோன்னதத்தைப் பறைசாற்றிக்கொண்டு கோபுரகலசங்களோடு உயர்ந்து நின்றிருந்தகந்தவேள் ஆலயம் தெரிவதாகப்பட்டது. அவர் அக்கோயிலைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவரல்லர். என்ருலும் அவரது கொள்ளுப்பாட்டனுர், ஷண்முகநாதக்குருக்கள் வாயிலாக வழிமுறையாகஅறிந்துகொண்டிருந்த விடரங்கள் கந்தனுலயத்தின் அருள் விளக்கத்தைத் தெரிந்து கொள்ளப்போதுமானது.

அவர் கண்கள் கலங்கின.

கிருஷ்ணையரின் வலக்கரத்தைப்பற்றிய படி ஒரு சிறுவன் நின்றிருந்தான். குடுமியும் பூணூலும் அவனும் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவனென அறிவித்தன. கிருஷ்ணையரின் தங்கை மகன் அவன்.

''போவமா?...'' என்று அவர் வலக்கலரத்தை அவன் உலுக்கினுன்.

கார்த்திகேசா இந்த இடத்தில் பெரியதொரு ஆலயம் இருந்தது. எம் முன்னேர் தான் குருக்களாக இருந்து இந்த ஆலயப் பூசைகளைச் செய்து வந்தார்கள். ஒரு நூற்ருண்டுக்கு முன் இந்தக் கோயில் பறங்கிகளால் இடிக்கப்பட்டது. அவ்வேளை இந்த நாட்டின் தலைநகர் நல்லூர்—இதுதான்! இன்று யாழ்ப்பாணம் தலைநகராகிவிட்டது. பெரிய கோயிலினை உடைத்து அதன் கற்களைக் கொண்டு டண்ணையில் பெரியதொரு கோட்டையும் பறங்கித்தெருவில் வீடுகளும் கட்டிக்கொண்டார்கள்''.

''உலாந்தர்களா இங்கிருந்த கோயிலை உடைத்தார்கள்?'' எனக்கார்த்திகேசு கேட்டான்.

''இப்போது எங்களை ஆள்கின்ற உலாந்தர்கள் இக்கோயிலை இடிக்கவில்லை. போர்த்துக்கீசப் பறங்கிகளே அந்தப்பாவகாரியத்தைச் செய்தார்கள். அதனுல் அவர்களால் இந்த நாட்டை நீண்டகாலம் ஆளமுடியவில்லை. 1658-ம் ஆண்டு இந்த மண்ணிலிருந்து போர்த்துக்கீசப் பறங்கிகளை, உலாந்தர்கள் துரத்தியடித்து விட்டு, ஆட்சிப்பொறுப்பை எடுத்துக்கொண்டார்கள். எப்படி சைவக்கோயில்களை இடித்தும், இடியாதுமாற்றியும் தங்களது கத்தோலிக்கத் தேவாலயங்களைப் போத்துக்கீசப் பறங்கிகள் அமைத்தார்களோ அதேபழி அவர்களுக்கு உலாந்தர் வடிவில் வந்தது. கத்தோலிக்க தேவாலயங்களை, இவர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயங்களாக மாற்றி விட்டார்கள்.''

''அபச்சாரம்...'' என்ருர் கிருஷ்ணையர். ''அது சாதாரண சமாதியில்லை. பெரியதொரு யோகியார் உடையது. எல்லா மதத்தவர்க்கும் அவர் யோகியாக இருந்தார்...''

## கிருஷ்ணையர் சுப்பையர்

''இங்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைப்பதற்கு ஏன் அனுமதித்தீர்கள்?''

கார்த்திக்சேசுவை, கிருஷ்ணையர் இரக்கத்தோடு பார்த்தார்.

''எங்கள் சமயத்தையே அனுஷ்டிக்க முடியாது. நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேம் தெரியுமா? யாழ்ப்பாண மக்களில் ஒருட குதியினர் பரசமயத்தவர்களாகி விட்டார்கள். படிப்பு, உத்தியோகம், சமூக அந்தஸ்து என்டனவற்றிற்காக மதம் மாறிவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் பெரும் சைவமாக இருந்த கதிர்வேற்பிள்ளை, இன்று மதம் மாறி, பேதுருப்பிள்ளையாகி விட்டார். ஏன் தூரப் போவான். நல்லூரில் சைவ மதத்தின் வளர்ச்சிக்குத் தூணாக விளங்கிய மாப்பாண முதலியார், இன்று கிறிஸ்தனாக மாறித் தனது பெயரையும் தொன்சுவான் மாப்பாண முதலியார் என மாற்றிக் கொண்டுவிட்டார்......''

''சச்சேரியில் சிருப்பராக இருக்கிருரே, அவரா?''

''ஆமாம்..''

கிருஷ்ணையர், மருகனை அழைத்துக்கொண்டு மேற்குத் திசையாகச் சென்ற வீதியில் நடக்கத் தொடங்கினுர்.

''உலாந்தர் ஆட்சியில், நிலைமை இன்று ஓரளவு மாறியிருக்கிறது. ஓரளவு மதவிடயங்களில் தலையிடாது ஒதுங்கியிருப்பதாகப்படுகின்றது. பறங்கிகள் காலத்தில் அவர்களது மதத்தைத்தவிர வேறு எம் மதத்தையும் அனுஷ்டிக்கமுடியாது எனச் சட்டம் இருந்தது. அவர்கள் காலத்தில் வீதிகளில் கோயில்கள் இல்லை. இரகசியமாக நமது தெய்வங்களை வீடுகளுள் மறைத்துவைத்து வணங்கிறேம். அதனுல்தான் சைவமக்களின் வீட்டுக்கு வீடு மரங்களுக்கு மரம் சிறிய சொரூடங்களை வைத்து இன்றும் இரகசியமாக வணங்கி வருகின்ருேம். விரத காலங்களில் வாழையிலைகளில் சாப்பிடுவது கூட நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும். அதனுல், சாப்பிட உபயோகித்த வாழை இலைகளைக் கூரைகளில் மறைவாகச் செருகி வைத்தோம். பறங்கிகளின் குதிரைக்குளம்படி கேட்டால் சிலுவையாகவும், பின்னர் சூலமாகவும் மாற்றக்கூடிய வைரவ சூலங்களை வைத்து வழிபட்டோம்.

''இன்று குருக்கள் வளவில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சமாதியையும் அதனுல் தான் வணங்குகிறீர்களாக்கும்......'' எனக் கூறிவிட்டுக் கார்த்திகேசு சிரித்தான்.

கிழக்கே சூரியன் வானில் ஏறத்தொடங்கினுன். பனி வெயில் உடலில் உறைக்கத் தொடங்கியது. அவர்கள் குருக்கள் வளவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். வரும் வழியில் வலதுபக்கமாக ஓரிடத்தைக் கிருஷ்ணையர் சுட்டிக் காட்டினுர். பெருந்தோட்டமும் அதன் நடுவே அழகிய மாளிகை ஒன்றும் காணப்பட்டது.

''இதுதான் பண்டார மாளிகை. பரராசசேகர மகாராசா இங்கு தான் இருந்தார். இன்று இது கொம்பனித் தோட்டமாம் உலாந்தா அதிகாரிகள் தமது விடுமுறை

### அத்தியாயம் - 1

யைக் கழிக்க இத்தோட்டத்திற்கு வருவார்கள்...''

''கொம்பனி என்ருல் என்ன?''

''யாருக்குத் தெரியும்...இப்படி அந்நியச் சொற்கள் தமிழ் மொழியில் எத்தனைபோ புகுந்து விட்டன. தெரியுமா? பறங்கிகளின் சொற்கள் தான் அதிகம்...அவை பறங்கிச் சொற்கள் என்று தெரியாமலேயே அவை நாளாந்த வாழ்வில் புழங்கி வருகின்றன. மேசை கதிரை அலுமாரி லாச்சி பீங்கான் வாங்கு அலவாங்கு குசினி விஸ்கோத்து இன்னும் றேந்தை துவாய் உருளோசு பட்டாளம் கரத்தை பெட்டிசம்... அலுகோசு—...''

''அலுகோசு என்ருல்?''

''தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவனைத் தூக்கில் மாட்டுபவன்—''

''பக்கத்து வீட்டுக் கந்தையர் தனது மகனை அன்றைக்கு அலுகோசு என்று ஏசியவர்......'' என்று கூறியவாறு கார்த்திகேசு சிரித்தான். அவனுடன் சேர்ந்து கிருஷ்ணையரும் சிரித்தார்.

அவர்கள் தங்கள் இல்லத்தை நெருங்கியபோது: அவர் கூறினுர்:

''கார்த்திகேசு நீ சிறு பிள்ளை, நான் சொல்வதை எவ்வளவு தூரம் புரிந்து கொள்வாயோ எனக்குத்தெரியாது. எனக்கு இப்போது ஐம்பது வயதாகின்றது. நீண்டகாலமாக என் அடிமனதில் ஒரு ஆசை... அப்படியல்ல ஏதோ ஒரு உந்துதல் ஏற்பட்டிருக்கிறது. அடிக்கடி கந்தவேளை என் கனவில் காண்கின்றேன். போத்துக்கீசப் பறங்கிகளால் அழிக்கப்பட்ட கந்தவேள் கோட்டத்தை மீண்டும் அமைக்கவேண்டும். அதில் எம்பெருமானைப் பிரதிஸ்டை செய்து எம்முன்னேர் செய்து வந்த பூசா கைங்கரியங்களைச் செய்யவேண்டும் அவ்வாறு அமையும் கந்தவேள் கோட்டம், அருள்விளக்கம் நிறைந்த பழைய இடத்திலேயே அமையவேண்டும். பெரிதாக என்னுல் என் அப்பனுக்குத் திருக்கோயில் கட்டமுடியாவிட்டாலும் சிறியதொரு மடாலயமாவது அவ்விடத்தில் அமைத்தேதீருவேன்...''

கார்த்திகேசு அவரை நிமிர்ந்து பார்த்தான். அவர் விழிகளில் தெறித்த பரவச நிலையை அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

''நிலத்திற்கு எங்கு போவீர்கள்?''

''அருள் விளக்கம் நிறைந்த அவ்விடத்தில், வாழும் உத்தம சைவன் எவனிடமாவது பூமிதானம் கேட்பேன்.

[தொடரும்]

சுத்தமான

விளைவு கற்பூரம்

சீனுவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனுவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும் மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு-

தொடர்பு கொள்ளவும்,

விநியோகஸ்தர் :

பிரபா ட்ரேடிங் கம்பெனி,

31-31A, கபோஸ் லேன், கொழும்பு - 11.

Phone: 29426

யாழ் மக்களுக்கு

ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள் மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

விஜயமாலா ரவல்ஸ்,

213, 215, செட்டியார்தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. கஜமுகலிங்கம்,

ரஜனி நிலயம், ஊரியாட்டி, சுன்னுகம்.

(9315)

## எண் சோதிடப்படி

# தமிழும் தமிழ்ப் பிரதேசமும்

# நீடித்துவாழ வழி என்ன?

''எண்ணென்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு
முயிர்க்கு
- திருவள்ளுவர்

இது நடைமுறையில்
''எண்ணில்லாதவர்
கண்ணில்லாதவர்''
''எழுத்தில்லாதவர்
கழுத்தில்லாதவர்''
என்கின்ற பழமொழிகள் வழங்கி வருகின்றன.

இதன்படி எண் காலத்தை அளக்க உதவும். அளவுகோல், எழுத்துக்களாலே பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவை சரியானபடி அமையாவிடின் தாழ்வுநிலை சூழ்ந்துகொள்வதை அவதானிக்கலாம்.

உ-ம்: தமிழ்ப்பாஷையையும் தமிழனையும் ஆங்கிலத்தில் Tamil என்று வழங்கப்பட்டு வருகின்றது.

### ஓ. எம். ஏ. நடராசா

I Speak Tamil
I am a Tamil

இந்த Tamil எனும் ஆங்கிலச் சொல் எங்கெங்கே பாவிக்கப்படுகிறதோ, அங்கு தமிழ் இனமும், தமிழ் பாஷையும் மேலோங்க பல இடையூறுகள் ஏற்பட்டு முன்னேற்றம் தடைப்படுகின்றது,

TAMIL
4 1413 - 13

13 எண்ணின் பலன்:

இது ஒரு பயங்கரமான எண். மேல்நாட்டவர் இப் ''பதின் மூன்று'' எண்ணைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றனர். ஹோட்டல்களிலும் 13ம் எண் அறைக்கு ஒருவரும் வரமாட்டார்கள். பிரசித்தமான வீடுகளில் இவ் எண் கொண்ட அறை காணப்படுவதில்லை.

எதிர்பாராத துயர சம்பவங்கள் நிகழ்ந்தபடி இருக்கும். பதின்மூன்று எண்ணையுடைய பாஷை ''பாளி'' அழிந்துவிட்டது.

It is a dead Language. அக்கதி Tamil என வழங்கப்படும் போது தமிழ்ப்பாஷையும் அழிந்துபோகும் அபாயங்கள் தோன்றிவருகின்றன.

இலங்கையில் கடந்த காலத்தில் நீ..கொழும்பு பகுதிகளில் தமிழ்ப்பாஷையும் தமிழினமும் துப்பாக்கி ஏந்தாமலேயே அழிக்கப்பட்டு மறைந்து விட்டன.

அதன்பின் இலங்கை முழுவதும் பெரும்பான்மையினரின் ''அதிகார வன்முறைகளால்'' தமிழ்ப்பாஷையும்தமிழ்பேசும் இனங்களும் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டு அழிக்கப்படுவதை காண்கிறோம்.

இதற்குவிமோசனம் எங்கே? அமரர் தந்தை S. J. V. செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள் எல்லாம் காலாகாலமாக நடாத்திவிட்டு இறுதியில் தன்முடிவைச் சொல்லியிருந்தாரே. ''கடவுள் தான் தமிழரைக் காப்பாற்றவேண்டும்'' என்று. அதன்படி விடுதலை வேண்டி நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோமா.

பஞ்சமாபாதங்களைத் தவிர்த்து சமய நெறியில் வாழ்ந்து இறைவனருளைத் தேடினால் எமக்கு அல்லலில்லை. நல்வாழ்வு கிடைப்பது நிச்சயம் இல்லாவிடில் நாம் அழிந்தொழிவதைத் தடுக்கமுடியாது போகும்.

இதற்கிடையில் புனித தெய்வீக எண்கலையைப் பிரயோசனப்படுத்தி எங்கள் நிலைமையைச் சீர்செய்ய எத்தனிப்போம் இதில் Tamil குறிக்கும் பதின்மூன்று எண்ணில் இருந்து விலகவேண்டியது அவசியமாகிறது.

Tamil என்ற சொல்லை ஆங்கிலேயர் சிருஷ்டித்திருக்கலாம்.

தமிழ் என்ற பதத்திற்கு நேர் மொழிபெயர்ப்பு ஆக Thamil என வழங்கலாமல்லவா.

Thamil என்பது அப்படி மொழிபெயர்ப்பு ஆகா தமிள் அல்ல தமிழ் என்பதற்கு இரண்டு ''எல்'' [L] வரவேண்டும்.

அவ்வாறு Tamil எனப் பாவிக்கப்படும்போது

THAMILL
451 4133 - 21

21 இன் பலன் அதிர்ஷ்டகரமானது.

முக்கிய குறிப்பு:

Tamils என வழங்கும்போது 16 எண் வருகிறது.

இதன்பலன் வேகமாக முன்னேறுதலையும் திடீரென தலைகீழாக விழுதலையும் குறிக்கிறது. இது ஓர் கோரபாவ எண். இது எவ்வளவு உண்மையென்பதை கோரமான அணுகுண்டினால் தாக்கப்பட்ட ஜப்பான் உறுதிபடுத்திவிட்டது.

(Japan 16)

வேறு:-

ஸ்ரீலங்கா (SRI LANKA]
3 2 1 3 1 5 2 1-18

ஈழம் [EELAM]
55314-18

### 18 எண்ணின் பலன்

இது மிகவும் பயங்கர பாவ எண். தெய்வீகத்தின் வீழ்ச்சியைக் குறிக்கிறது: இவ் எண் கஷ்டங்களையும், காரியங்களுக்கு வீண் தாமதத்தையும் சூழ்ச்சிகளையும் ஆபத்தான எதிரிகளையும் உண்டுபண்ணும். இதனால் சமூகவிரோதமான காரியங்களில் சுயநலத்தால் துண்டாடப்பட்டு ஈடுபடுபவர்: மனமறிந்து தவறான தீயகாரியங்களைச் செய்ய வேண்டிவரும். சுயநலம் வளரும், அருளும், அமைதியுமற்ற வாழ்க்கை அமையும். இவ் எண் ஆசைகள் வளர்ந்து தெய்வீகத்தை அழிப்பதைக் குறிக்கிறது.

பொறாமை, வஞ்சகம், தீயினாலும் ஆயுதங்களாலும் பேராபத்துக்கள் ஏராளமுண்டு. ஆகையால் இவ் எண்ணின் பிடியிலிருந்து விலக வேண்டியது மிகமிக அவசியம்.

SRILANKAN என இருப்பது SRILANCA !as in LANCA SHIRE என வழங்கலாம். அப்போது பத்தொன்பது[19] எண் வருகிறது. இது ஓர் அதிர்ஷ்டகரமான எண்.

இதன் சொற்றொடர்கள்
SR1LANCAN-24
SR1LANCANS-27

24, 27 எண்கள் மிக மிக அதிர்ஷ்டகரமானவை.

EELAM என்பதை மாற்றியமைப்பது எப்படி?

EELOM என வழங்கலாம். அப்போது 24 எண் வருகிறது. 24 முன் சொன்னது போல் மிக மிக அதிர்ஷ்டகரமானது.

24 எண் எவ்வளவு அதிர்ஷ்டகரமானது என்பதற்கு உதாரணங்கள்:-

இலங்கை [CEYLON] என ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட போது 24 எண்ணில் இருந்தது. அப்போது இங்கு வாழ்ந்தோர் மனநிம்மதியுடனும், சுபிட்சத்துடனும் இருந்தார்கள் என்பதும் இன்றுள்ள நிலைமையும் யாவரும் அறிந்ததே. வேறு அப்போது இத்தீவை மேல்நாட்டவர் கிழக்குலகிலுள்ள ''முத்து'' எனவும் இப்புவியில் ஓர் அழகிய இடம் எனவும் யாவரும் இவ் அழகிய தீவிற்கு ஒரு முறை யாவது வந்து தரிசித்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துச் செல்ல ஆவலாயிருந்தன.

இந்நாட்டிற்கு ஒரு துளி இரத்தம் சிந்தாது, மகாத்மா காந்தியின் ஆத்மசக்தியால் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தபோது இதன் எதிரொலியாகவே இத்தீவிற்கும் சுதந்திரம் கிடைத்தது. [Freedom was thrust on Ceylon]

ஈழத்தோடு சம்பந்தப்பட்ட சில சொல்தொடர்கள்:-

EELOMAN
5 5 3 7 4 1 5 -30
EELOMANS
5 5 3 7 4 1 5 3 -33

எண்[முப்பது] 30 ஓர் அளவிற்கு அதிர்ஷ்டகரமானது,

ஈழம், இலங்கையில் வடக்குக் கிழக்கில் தமிழ்பேசும் இனங்கள் வாழும் பாரம்பரிய பிரதேசங்களைக் குறிப்பதாகக் கருதலாம்.

ஸ்ரீலங்கா ஈழம் தற்போது 18 எண்ணின் ''கோரப்பிடி'' யில் சிக்கித் தத்தளிக்கிறது. இவ் எண்ணில் தொடர்ந்தும் இருந்தால் நான் ஆழ்ந்தகவலையுடன் கூறி வைக்கவேண்டியது ஸ்ரீலங்காவும். ஈழமும் நிர்மூலமாக்கப்பட்டு இப்புவியில் இருந்து அழித்து ஒழிந்து துடைத்து எடுக்கப்பட்டுவிடும் பேரபாயத்தை எதிர்நோக்குகிறது.

ஈழம் குறிக்கும் பிரதேசங்கள் தீயபலன்களின் மும்மடங்கு ஆட்சிக்குட்பட்டிருப்பதால் நிர்மூலமாக்கல், உயிர் உடைமை அழிவு, ஆரம்பமாசி மும்மடங்கு வேகமாக கிடந்து கொண்டிருக்கிறது. இதே கதி ஸ்ரீ லங்காவிற்கு நேரும்.

இப்பேராபத்துக்கள் நீங்கி இலங்கையில் வாழும் மக்கள் சுபிட்சமாகவும், மனநிம்மதியுடனும் வாழ மேலே சொல்லப்பட்ட திருத்தங்களை ஏற்படுத்திச் செயல்படுத்துவோமாக.

## ஒரு குழந்தையின் உருக்கமான வேண்டுகோள்!

எனே அம்மா! அப்பா! ரீச்சர்!


எனது கரங்களோ சிறியவை. பாலைத் தட்டிஊற்றும் எண்ணம் எனக்கில்லை. எனது கால்களும் குறுகியவை. தயவு செய்து மெதுவாக நடவுங்கள் அப்போதுதான் நானும் உங்களுடன் கூடவரமுடியும். நான் அலங்காரமான அழகான பொருட்களை விரும்பித் தொடும்போது எனது கைகளைத் தட்டாதீர். எதனையும் விளங்கும்தன்மை எனக்கில்லை. தயவுசெய்து உங்களுடன் பேசும்போது என்னைஅவதானியுங்கள். உண்மையிலேயே நீங்கள் அவதானிக்கிறீர்கள் என்பதை நான் உணரச்செய்யுங்கள். எனது உணர்வுகள் மிருதுவானவை. நாள் முழுவதும் என்னை நச்சரிக்க வேண்டாம். மூடத்தனம் என்ற உணர்வு இல்லாத தவறுகள் செய்ய என்னை விட்டுவிடுங்கள். நான்போடும் படுக்கை அல்லது படம் பூரணமாக இருக்கும் என எண்ணவேண்டாம். நான் முயலுவதற்காகவே என்னில் அன்புகொள்ளுங்கள். ஞாபகத்தில் வைத்திருங்கள். நான்ஒரு குழந்தை. ஒரு சிறிய முதியவனல்ல. சில நேரங்களில் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பதை என்னால் விளங்கமுடியவில்லை. உங்களை நான் பெரிதும் விரும்புகிறேன். நான் நானாக இருப்பதற்காகவே என்னை அன்புகூருங்கள். நான் செய்பவைகளுக்காக என்னை நேசியாதீர்கள்.

தமிழில்:
வதிரி
அபிவிருத்தி நிறுவனம்,

## சோவியத்தில் ''ஜோசியம்''

சோதிடம் பார்ப்பது சோவியத் யூனியனில் ஒரு பெரிய சமூக நோயாக மாறிவிட்டது. பலரது வாழ்வையே அது அழிக்கிறது. கோப்பிக் கொட்டைகளை வைத்து ஆருடம் சொல்பவர்களின் ஜோஸ்யப்ப.. மக்கள் குருட்டுத்தனமா..க்கிறார்கள். அண்மையில் ஒருபெண், இச்சோதிடத்தை நம்பிக் கணவனை விவாகரத்துச்செய்தாள். சாராயத்தைப் போல மனிதனது மிகச்சிறந்த குணங்களை இது அங்குகெடுத்துவருகிறது. சமூகக்கேடு என்ற முறையில் மதுவும், சோதிடமும் மனிதனைக் கெடுக்கின்றன. இத் தகவலை சோவியத்யூனியனின் 'ருடு. பத்திரிகை வெளியிட்டுள்ளது.

-- சச்சி

[காந்திஜி தென்னுபிரிக்காவில் பல ஆண்டுகள் பணிபுரிந்தபின் 1901-ம் ஆண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார். அங்கு அவர் ஆற்றிய பொதுப் பணிக்காக அங்குள்ள இந்திய சமூகத்தினர் பல்வேறு விதமான அன்பளிப்புக்களையும் வழங்கினுர்கள். அவைகளைப் பெற்றுக்கொண்ட காந்திஜி பட்டபாட்டை இங்கு விபரிக்கிறுர். பொதுப்பணியில் இறங்குபவர்கள் எவ்வளவு தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை காந்திஜியின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகின்றது.] — பி. எஸ். பி.

# அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொண்டு காந்திஜி பட்டபாடு!

## அவரே சொல்கிருர்

இந்தியாவில் எனக்கு அதிக பணிகள் இருப்பதாகக் கருதினேன். எனவே என்னை விடுவிக்குமாறு எனது தென்னுபிரிக்க நண்பர்களைக் கேட்டுக்கொண்டேன். மிகுந்த கஷ்டத்துள் ஒரு நிபந்தனையுடன் அனுமதி கிடைத்தது. இந்தியா திரும்பியபின் ஒரு வருடத்துக்குள் எனது சேவை அங்கு தேவைப்படுமானுல் நான் மீண்டும் தென்னுபிரிக்காவுக்குத் திரும்பவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இது மிகவும் கஷ்டமான நிபந்தனைதான், ஆனுல் அந்தச்சமூகத்துடன் எனக்கு ஏற்பட்டிருந்த அன்புப்பிணைப்பு அதனை ஏற்றுக்கொள்ளச்செய்தது.



''அன்பெனும் பருத்தி
இழையினுல் பகவான்
என்னை இணைத்துக்
கொண்டு விட்டான்
அவனுக்கு நான்
கொத்தடிமையாகிவிட்டேன்''

இவ்வாறுபாடினுள் மீராபாய். எனது சமூகத்துடன் என்னை இணைத்திருந்த பருத்திநூலாகிய அன்புப்பிணைப்பானது அறுக்கமுடியாததாய் இருந்தது. மக்கள் குரல்தான் மகேசுவரன் குரல். இங்கு நண்பர்களின் கோரிக்கை மறுக்க முடியாததாகிவிட்டது. அவர்கள் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு அனுமதியும் பெற்றேன்.

பிரியாவிடைக் கூட்டங்கள் எல்லா இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டன. பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. 1919ல் நான் இந்தியா திரும்பியபோதும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டதுண்டு. ஆனுல் இம்முறை பிரியாவிடை அபரிமிதமாக விருந்தது. பொன் வெள்ளிபொருட்கள் மட்டுமல்ல விலையுயர்ந்த வைரங்களும் அடங்கியிருந்தன.

இந்த அன்பளிப்புக்களையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு எனக்கு என்ன உரிமை இருந்தது? இவைகளை ஏற்றுக் கொண்டபின் வேதனம் எதிர்பார்க்காமல் சமூகத்துக்கு பணியாற்றுவதாக நான் எப்படிக்கூறமுடியும்? ஒரு சிலர் எனது வாடிக்கையாளர்களைத் தவிர்ந்த ஏனைய அனைவரது அன்பளிப்புக்களும் நான் சமூகத்துக்கு ஆற்றிய பணிக்காகவே கொடுக்கப்பட்டவை. எனது சகஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் என்னுல் பிரித்துப்பார்க்க முடியவில்லை. ஏனெனில் வாடிக்கையாளர்களும் எனது பொதுப்பணிகளுக்கு உதவியுள்ளார்கள்,

அன்பளிப்புக்களில் ஒன்று ஐம்பது கினி பெறுமதியான ஒரு தங்கமாலையாகும். இது என்மனைவிக்காக வழங்கப்பட்டது. அதுவும் எனது பொதுப் பணிக்காக கொடுக்கப்பட்டதே. ஏனையவைகளிலிருந்து அதையும் பிரிக்கமுடியாது.

இந்தஅன்பளிப்புக் குவியலைப் பெற்றுக்கொண்ட இரவு முழுவதும் எனக்கு அமைதியில்லை இரவு முழுவதும் ஆழ்ந்த மனக்குழப்பத்தோடு எனது அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தேன். ஆனுல் தீர்வுஒன்றையும் காணவில்லை. பெறுமதியான அன்பளிப்புக்களை கைவிடுவது கஷ்டமாகவிருந்தது. அவைகளை வைத்துக்கொள்வதும் அதேபோல் கஷ்டமாகவிருந்தது.

நான் அவைகளை வைத்துக் கொண்டாலும் என் பிள்ளைகள், மனைவியின் நிலைஎன்ன? அவர்சள் பொதுச்சேவையில் பயிற்சியளிக்கப்பட்டு வந்தார்கள்.

சேவைக்கு சேவையே கைம்மாறு என அவர்கள் உணர்த்தப்பட்டுவந்தனர்.

எங்கள் வீட்டில் நான் பெறுமதியான நகைகள் ஏதும் வைத்திருக்கவில்லை. வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்வதில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம். இந்நிலையில் தங்கக்கடிகாரங்களை எங்ஙனம் வைத்துக்கொள்ள முடியும்? தங்கச் சங்கிலிகளையும், வைர மோதிரங்களையும் அணிந்து கொள்வதற்கு எம்மால் எப்படி முடியும்? ஆபரணங்களுக்கான ஆசையைக் கைவிடும்படி மக்களை நான் கேட்டு வந்திருக்கிறேன். இப்பொழுது என்னிடம் வந்துசேர்ந்துள்ள நகைகளை நான் என்னசெய்வது?

இவைகளை நான் வைத்துக் கொள்வதில்லையென முடிவு செய்தேன். சமூகத்தின் சார்பாக ஒரு அறக்கட்டளையை உருவாக்கும் விதத்தில் ஒரு கடிதத்தைத் தயாரித்தேன்.

இதற்கு என்மனைவியையும் இணங்கவைப்பது பெரும் சிரமமாகவே இருக்கும் என்பதை நான் அறிவேன். பிள்ளைகளைப் பொறுத்தவரை இந்தப்பயம் இருக்கவில்லை. எனவே அவர்களையே என்சார்பில் வாதிடும் வக்கீல்களாகப் பயன்படுத்திக் கொள்ள தீர்மானித்தேன்.

எனது யோசனையை என் குழந்தைகள் அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ''எமக்கு அந்த விலையுயர்ந்த நகைகள் தேவையில்லை. அவைகளை சமூகத்துக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். எமக்கு எப்போதாகிலும் தேவைபட்டால் இலகுவாக விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம்'' என்று அவர்கள் சொன்னுர்கள்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'அப்படியானுல் இதுபற்றி அம்மாவிடம் எடுத்துக்கூறுவீர்கள், அல்லவா?'' நான் கேட்டேன்.

''நிச்சயமாக'' அது எங்கள் வேலை என்றுர்கள். ஆனுல் சொல்வது இலகு செய்வதுதான் கஷ்டம். என்மனைவி கூறினுள். ''உங்களுக்கு அது தேவைப்படாமலிருக்கலாம், உங்கள் தாளத்துக்கு அவர்கள் ஆடுவார்கள். நான் அவைகளை அணியக்கூடாது என நீங்

(8 ம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

**செல்வன் ரீ. ஏ. செல்வக்குமாரன் (கிச்சி)**

(ஆங்கில உதவி ஆசிரியர்
மன்/நறுவிலிக்குளம் றே. க. த. பாடசாலை)



**மண்ணுலகில்:**
**09-12-1959**

**விண்ணுலகில்:**
**22-12-1984**

''மாணவர்களின்
அறிவுப் பசி தீர்க்கக்
கல்வி தந்தனே!
எங்களது
வயிற்றுப் பசி தீர்க்க
உழைப்பைத் தந்தனே!
சீறிவந்த
குண்டின் பசிதீர்க்கத்
துணிந்தனே ஏனோ?''

உன்பிரிவால் இருந்தேங்கும்:
தந்தை, தாய், அண்ணன்மார், அக்காமார்,
தம்பிமார், தங்கை, மைத்துனன்மார்,
மருமக்கள்: சசி, சர்மி.

வடக்குத் தெரு,
தொண்டமனுறு. 2459

## குத்தும் நுளம்பே!

கேடு கெட்ட மாந்தா ...தவை அடைத்ததினுல்
மாடு கட்டும் கொட்டில் இதே மாநிலத்து மீட்பனுக்கு
வீடாக இங்கே விழித்துக் கிடந்ததினுல்
ஓடி வந்தார் சூசையப்பர் உத்தமியாள் மேரியுடன்
பாடுகின்றுய் இங்கிருந்து பச்சை ரத்தம் வேண்டுமென்று
குத்தும் நுளம்பே அக் கொட்டிலிருக்குப் போகாதே
உத்தமரை இங்கிருந்தும் ஓடக் கலைக்காதே
உத்தமராம் சூசைஇனி ஓடஇடமில்லையப்பா



குத்தும் நுளம்பே,
குழந்தையிடம் போகாதே
சத்திய வேதமதைச் சாதிக்க வந்துதித்த
உத்தமனைக் கொஞ்சம் உறங்கவிடு தூங்கட்டும்
அத்தன் உறங்கி எழுந்தால் அகிலத்திற்
சத்தியம் ஓங்கும் சரியென்று பட்டதனைக்
குத்தியே காட்டும் குழந்தையை நீ குத்தாதே
தூங்கி எழட்டும்; பின் துன்பத்தைச் செய்திடலாம்
ரீங்காரம் வேண்டாம் நுளம்பே நீ சென்றுவிடு
கன்றைக் கடித்துக் கதற வைக்கும் நின் கொடுக்கால்
இன்றலர்ந்த பூவின் இரத்தம் குடிக்காதே
இன்றவனும் தூங்கி எழும்பட்டும், நாளைக்கு
நன்றுய் வளரட்டும் நல்லுதிரம் ஊறட்டும்
குன்றில் இருந்தே பிரசங்கஞ் செய்யட்டும்
நன்றென்றே நானிலத்து நல்லோர்கள் சொல்லட்டும்
சென்ற இடமெல்லாஞ் சென்றவனைச் சூழட்டும்
கண்களெல்லாம் பார்க்கட்டும் காதெல்லாங் கேட்கட்டும்
மண்ணில் அவதரித்த மீட்பன் என நம்பி
உள்ளப் பிணியைக் குணப் படுத்திக் கொள்ளட்டும்
கள்ளப் பரிசேயர் காழ்ப்புணர்ச்சி கொள்ளட்டும்
உள்ளதனை மாற்றி உரோமரிடஞ் சொல்லட்டும்
போஞ்சியோ பைலத்தும் தீர்ப்பை வழங்கட்டும்
வாஞ்சையுடன் தீயோர் வழி நடத்திச் செல்லட்டும்
கற்றூணிற் கட்டி அடிக்கட்டும் அப்பொழுது
சற்றுக் குருதி கசியட்டும் பின் அவர்க்கு
முள்ளாலே செய்தோர் முடியை அடிக்கட்டும்
பொள்ளென்று இரத்தம் பொசியட்டும் இப்பொழுது
பாலன் மனுவேலன் பாவ அழுக்கறுக்கும்
சீலன் சிறிதயர்ந்து தூங்கட்டும் நீங்கிவிடு
கல்வாரி நோக்கிக் கனத்த சிலுவையுடன்
செல்லும் பொழுதங்கே சிந்தட்டும் பச்சை ரத்தம்
கொல்கொத்தாக் குன்றிற் கொடுமரத்திற் தொங்குகையில்
எல்லாம் முடிந்ததென்றே ஏழாந் திருமொழியும்
சொல்லி முடித்த பின்னும் பொல்லாத ஓர் மழுவன்
ஈட்டியாற் குத்தி இரத்தம் எடுப்பான்! நீ
போட்டியாய்க் குத்தி இரத்தங் குடிக்காதே
பாட்டிற் கிடக்கட்டும் பாலன் இன்று தூங்கட்டும்
காலம் இருக்கிறது பாலன் இன்று தூங்கட்டும்
முப்பத்து மூன்று வருடம் இருக்கிறதே
இப்பொழுது பாலன் இமை மூடித் தூங்கட்டும்
முப்பத்து மூன்று வயதிற் புறஞ் சென்று
அப்டத்தி னுடிரண்டு சீடர்களைத் தேடட்டும்
பன்னிரண்டில் ஒன்று பழுதாகிப் போகட்டும்
தன்னிரண்டு கையால் அணைக்கட்டும் முத்தமிட்டுக்
காட்டிக் கொடுக்கட்டும் அந்த யூதாஸ்கரியோத்
காட்டிக் கொடுப்பதற்குக் காலம் இருக்கிறதே!
பாட்டில் அவனைப் படுத்துறங்க விட்டுவிடு
மாட்டைக் கடிக்கும் நுளம்பே வா, என்னுடனே
மோட்டுத் தனமாய் அப் பாலகனைக் குத்தாது
முத்தமிழால் வல்ல முருகு ஐயனை வணங்கிச்
சத்தம் போடாமல்... சரி... நாங்கள் சென்றிடலாம்.

— சத்தியசீலன்

# "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்"

## ஒரு நோக்கு

ஓர் இனம், ஒரு வர்க்கம், ஒரு நாடு விடுதலையை நாடி நிற்கும் காலகட்டத்தில், அதன் தேவையை ஒட்டிய கலை இலக்கியங்கள் தோற்றுவிக்கப்படுவது தவிர்க்க முடியாதது இது வரலாற்று நியதியுங்கூட.

இந்த அடிப்படையில் "மலரும் புதுயுகம்", "மண்சுமந்த மேனியர்" ஆகிய நாடக இலக்கியங்களின் வரிசையில் ஒருபடி முன்னேக்கி நிற்பது தான் சில வாரங்களுக்கு முன் யாழ். பல்கலைக்கழக அரங்கில் மேடையேற்றப் பட்ட "சிந்திக்கத்தொடங்கி விட்டார்கள்" என்ற நாடகமாகும்.

சமகால தேசவிடுதலைக்கான நிகழ்வில் இம்மண்ணின் ஒதுக்குப்புறங்களில் குறிப்பாக செம்மண் பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் வறியகூலி விவசாயிகள் என்னும் பாட்டாளி வர்க்கத்தினர் பிரதான சக்தியாவர்; இவர்களது விடுதலையானது தேச விடுதலையோடு மட்டுமன்றி வர்க்க விடுதலையிலேயே தங்கியுள்ளது என்றதத்துவத்தின் சித்திரிப்பாக இந்த நாடகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சகலரும் தமிழராக இருந்தும் தமிழ்ப் பணக்கார விவசாயிகள் இம்மண்ணின் மக்களை எந்தெந்த ரீதியில் வஞ்சிக்கிருர்கள்? அவர்களது விடுதலை எழுச்சிகளை எவ்வாறு சிதறடிக்கின்ருர்கள் என்பன கதாபாத்திரங்களுக் கூடாக யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

தர்மலிங்கத்தார் என்ற பணக்கார விவசாயிக்கும்வறிய கூலி விவசாய மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கதை ஓட்டமாக அமைந்துள்ளது. இந்த முரண்பாட்டில் தோல்விகண்ட தர்மலிங்கத்தார் பிரதான நிகழ்கால முரண்பாடான தேசவிடுதலை நிகழ்வில் தன்னை "நடுநிலைமைவாதி" என்று கூறிக் கொண்டு எதிரியின் காலடியில் சரணடைவதாக நாடகம் முடிவடைகின்றது.

பணக்கார விவசாயியான தர்மலிங்கத்தார் நிகழ்கால நிகழ்வில் எதிரியின் காலடியில் சரணடையும் நிகழ்ச்சியானது; நிகழ்கால வரலாற்றை முன்னெடுக்கும் சக்திகளில் தர்மலிங்கத்தார்களுக்கும் பங்குண்டு என்பதை மறுக்கும் செயலாக அமைந்துள்ளது. இது நடைமுறை அரசியலில் நாடகத்துக்கு ஏற்பட்ட தத்துவார்த்த வறட்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளமை நாடகத்தின் குறைபாடாகவும் அமைந்துள்ளது.

எதுவாயினும் முழுக்க முழுக்கக் கிராமியமட்டத்தில் கிராமிய சூழலில், கிராமிய முரண்பாட்டினை யதார்த்த பூர்வமான முறையில் கிராமியக் கலைக்குழுவினரால் கொண்டு வரப்பட்ட இந்த நாடகம் பலரின் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

- சாந்தி

# காந்தி பட்டபாடு

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கள் தடுப்பதும் எனக்குப் புரிகின்றது. ஆனுல் எனக்கு வரப்போகிற மருமகள்மார்பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவர்களுக்கு நிச்சயம் அவை தேவைப்படலாம். நாளைக்கு என்ன நடக்கும்என யார் அறிவார்? இவ்வளவு அன்புடன் வழங்கப்பட்டுள்ள இந்தப் பொருட்களைக் கைவிட என்னுல் முடியாது."

இவ்வாறு விவாதம் தொடர்ந்து கடைசியில் கண்ணீர்த் துளிகளும் விவாதத்துக்கு வலு ஊட்டின. நான் மெதுவாகக் கூறினன்.

'பிள்ளைகள் இனிமேல்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிருர்கள். சின்ன வயதிலேயே அவர்கள் மணம் முடிப்பதை நாம் விரும்பவில்லை. அவர்கள் வளர்ந்த பின் தங்களை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். நிச்சயமாக, நகை நட்டுக்களில் ஆசையுள்ள பெண்களை நாம் மருமக்கள்களாக எடுக்கப் போவதில்லை. அப்படியே அவர்களுக்கு நகைகள் வழங்க வேண்டும்என நாம் கருதினுல் நான் இருக்கிறன் நீ என்னிடம் கேட்கலாம்."

"உங்களிடம் கேட்பதா? இவ்வளவு காலமாக உங்களை நன் அறியாமலா இருக்கிறேன்? என் நகைகளையே இல்லாமல் செய்தீர்கள். அவைகள் இருக்கும் வரை என்னை நிம்மதியாய்இருக்கவிடவில்லை. மருமகள் மாருக்கு நகைகள் வாங்கிக் கொடுப்பீர்கள் என்று சொல்வது வெறும் பகிடி. என் பிள்ளைகளை நீங்கள் துறவிகளாக மாற்றுகிறீர்கள் இல்லை நகைகளைத் திருப்பிக் கொடுக்க முடியாது என் கழுத்துச் சங்கிலியைக் கேட்பதற்கு உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது சொல்லுங்கள் பார்ப்போம்."

"சரி அந்தச் சங்கிலியை உன் சேவைக்காக கொடுத்தார்களா, என் சேவைக்காகக் கொடுத்தார்களா"

"ஒப்புக் கொள்கிறேன். ஆனுல் நீங்கள் செய்த சேவைகள் நான் செய்ததுக்குச் சமமே, உங்களுக்காக இரவு பகலாக நான் உழைத்திருக்கின்றேன். அது சேவையில்லையா? சின்னச் சின்ன வேலைகளையெல்லாம் என் தலையில் சுமத்தி இரவு பகலாக அழவைத்து அவர்களுக்காக அடிமையாக வேலை வாங்கினீர்களே!"

இவைகள் ஆணித்தரமான விவாதங்கள் தாம் இவைகளில் சில மனதில் நன்ருக உறைத்தன. ஆனுல் அவைகளைத் திருப்பிக் கொடுப்பதென நான்உறுதியுடன் இருந்தேன். ஒருவாறு அவளது சம்மதத்தைப் பெற்றுக் கொண்டேன்.

1896 லும் 1901 லும் எமக்கு வழங்கப்பட்ட நகைகள்அனைத்தும் திருப்பிக் கொடுக்கப்பட்டனஅறக்கட்டளைக்கானஉயில் தயாரிக்கப்பட்டு என் விருப்பப்படி அல்லது நம்பிக்கையாளர்களின் விருப்பப்படி சமூகத்துக்காக அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

அதன் பின் அந்த நடவடிக்கை பற்றி நன் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. கால ஓட்டத்தில் எனது மனைவியும் அதன் பெருமையை உணர்ந்து கொண்டாள் பல ஆசைகளிலிருந்து எம்மை அது பாதுகாத்துவிட்டது.

பொது சேவை புரிபவன் பெறுமதியான அன்பளிப்புக்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதே இன்றும் எனதுகருத்தாகும்."

"சத்தியசோதனை" யிலிருந்து தொகுக்கப்பட்டது.

# பாரதியைத் தேடி அலையும் பறவைகள்

ஒவ்வொன்றிலும் ஒளியைக் கண்டான் பாரதி. எழிலைப் பருகினுன். உயிருள்ளது, உயிரற்றது எந்தப்பொருளானுலும் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பின. கற்பனை கரைபுரண்டோடியது. கவிதைகள் பூத்துக் குலுங்கின. அந்த வண்ணமலர்கள் வாடாமல் இன்றும் வையகமெங்கும் மணம் கமழப் பொலிவூட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. அவன் கண்டுபேசிய காக்கை குருவி, கிளி, குயில் பறவை இனங்கள் வானில் இன்னும் சிறகடித்து ஆலாய்பறந்த வண்ணம் அவன்குரல் கேட்காதா என ஏங்கித் தவிக்கின்றன போலும்!

தி. ராதாகிருஷ்ணன்

தருபவர்: கணேஷ்

# ஒரு ஆத்மாவின் புலம்பல்

என் வீதியில்
எதற்காக
இத்தனை இருட்டு?
என்னத்திற்காக
என் நெற்றியிலிந்த
அகதி முத்திரை?

என் வீட்டைப்போலவே
வானமும்
உடைந்துவிட்டதே...!
நட்சத்திரங்கள்
கருக்கப்பட்ட
நம்பிக்கைவானம்
துளிர்விடுமா?

சொந்தங்களை இழந்து
விட்டதால்
சோகங்கள் மட்டுமே
இப்போது என்
சொந்தங்கள்

அந்த முழக்கங்களுக்கு
முகவரியில்லாதபோது
- உயிரின்
முகவரியல்லவா
இடம்மாறி விடுகிறது!

என்... தாலிச் சரடு
திரும்பவேண்டுமென்று
எந்தமுகவரிக்கு நான்
எழுதிக்கேட்பது?
ஓ...........
அந்தத்தீர்ப்புகளுக்குரிய
விசாரணைகள்
எந்த நீதிமன்றத்தில்
எப்போது நடந்ததோ

சிலவேளை.........
'அவர்கள்'
விசாரணை இல்லாமலேயே
தீர்ப்பு வழங்கக்கூடிய
திறமை சாலிகளோ...?!

இல்லாவிட்டால்...!
இந்தப் பூமிக்கும்
தர்மத்திற்குமான
தனித்துவமோ?
இந்த விளங்காத
வினக்களுக்கு விடையை
எங்கேதேடுவது?

இந்த வினக்களுக்கு
விடைகிடைத்தாலும்
என் இழப்புக்கள்
மீண்டு விடுமா?
மீண்டும் இந்தப்பூமியில்
முளைத்தெழுந்து
கண்ணீர் துடைக்க
கையை நீட்டுமா?

... ... ...
... ... ...
என்ன இருந்தாலும்
எனக்கு
ஆறுகள் குளங்கள் தான்
ஆறுதல் தரும்.

ஆனுல்...—
என்
எஞ்சியுள்ள
சின்னவன்
ஆறுதல் இல்லாமல்
அலைந்து விடுவானே!
பாலர் வகுப்பில்
படிக்க வாங்கிய
கொப்பி ஒற்றையில்
காகித வெடிசெய்யும்
அவனை
கவனமாக
வளர்க்கவேண்டுமே!

— அ. தத்வசுதன்

# ஜனனியின் கணக்கு — 1

ஒரு கடிகாரம் ஆறு தடவை மணியடிக்க இருபது விநாடிகள் எடுக்கின்றது என்ருல் பன்னிரண்டு தடவைகள் மணியடிக்க எத்தனை விநாடிகள் எடுக்கும்?

**விடை:**

## 40 விஞடிகள் அல்ல

நாற்பத்து நான்கு விநாடிகள் ஆகும். எப்படி என்கிறீர்களா?

முதல் ஆறு தடவையும் மணி ஒலிக்க இடையில் 5 இடைவெளிகள் உள்ளது. ஐந்து இடைவெளிகளுக்குள் உள்ள நேரம் 20 விநாடிகள். எனவே 70 இடைவெளிக்குள்ள நேரம்4 விநாடிகள் ஆகும்.

பன்னிரண்டு தடவை மணி ஒலிக்க இடையில் 11 இடைவெளிகள் தோன்றும். எனவே 11X4 விநாடிகளில் அதாவது44 விநாடிகளில் கடிகாரம் பன்னிரண்டு தடவை ஒலிக்கும்.

—புஷ்பஜனனி

# விடியலுக்குஇல்லை தூரம்

பல சிறந்த நாடகங்களை மேடையேற்றிச் சிறப்புக் கண்ட யாழ். சென். ஜேக் சனசமூக நிலைய வான்மதி கலாலயம் தற்காலப் பிரச்னைகளை மையமாக வைத்துத் தயாரித்துள்ள மேடை நாடகமான 'விடியலுக்கு இல்லைத் தூரம்' யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு வருகிறது.

1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட இன சங்கார நிகழ்வின் பின்னுல் ஏற்பட்ட மாற்றங்களைக் கொண்டு நகரும் இந் நாடகத்தில்நவீனநாடகசாயல் தொனிக்கிறது. அரங்க எளிமையைப் பயன் படுத்தி நல்லதொரு மேடை நாடகத்தைக் கொடுத்திருக்கின்றகதைஉரைஞர் மூலம் பல துயர் மிகுந்த சம்பவங்களும் தென்னிலங்கையில் அடிக்கடி இடம் பெறும் இனப்படுகொலைகளும் மேடை முறையில் சொல்லப்படுகின்றன, நாட்டுப் பாடல், தெம்மாங்கு, நாட்டுக் கூத்துப் போன்ற பாடல்களைக் கொண்டு சுவை மிகுந்த இசை நயத்துடன் செல்லும் இந் நாடகம் அன்றும் இன்றும் தமிழர்கள் படும் அவலங்களின் உண்மைகளை கூறி நிற்கிறது. சொந்த மண்ணிலேயே அகதி நிலையில் அல்லற் பட்டு நிற்கும் நிலையுடன் மக்கள் புரட்சியை நினைவூட்டி முடிவுறும் இந் நாடகத்தில் ஆறுக்கும் மேற்படாத பாத்திரங்களே அறிமுகப் படுத்தப்பட்டினும். தற்கால பயங்கரவாத அடக்கு முறைக்கான அரச தரப்பு ஆயத்தங்களை சில பாத்திரங்கள் மூலம் நகைச் சுவையாக வழங்கியுள்ளார்கள்.

கலைஞர்கள் வி. ரி. விஸ்பா, ஜே ஏ, சேகர், வி. எம். இராஜேந்திரன், ஜே. அரியசீலன், பி, பீற்றர் போல், செல்வி. பட்டு அருளப்பு, வி. எம். ஜெருட் ஆகியோர் தோன்றும் இந் நாடகத்திற்கு விஸ்வா பிரதி ஆக்கம் செய்ய வி. எம். ஜெருட் சிறப்பாக இயக்கியுள்ளார்.

இந் நாடகம் வெள்ளி விழா மேடையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

சீலன்

# ஒரு கடிதம்

'நயினை நாவி' அவர்கள் 10-11-85 "ஈழநாடு" வாரமலரில் ஏழரைச் சனி என்றும் அட்டமத்துச்சனி என்னும் ஏக்கமடையாதீர் என்ற வெகு நேர்த்தியான, அர்த்தமுள்ள, சுயநலமற்ற பொதுநலம் கொண்ட நல்லெண்ணக்கட்டுரையைப் படித்து உண்மையில் நான் மனமகிழ்ந்தேன். சாதாரண மக்களுக்கு இப்படியான பெருந்தன்மைஉள்ள மனம்கொண்டு மிகத்தெளிவாக எடுத்துக்காட்டியதற்கும், இறுதியாக மனம் கலக்கப்படாமல், சிதறவிடாமல் நம்பிக்கையுடன் இறைடக்தியுடன் வாழ்ந்தால் சகல துன்டங்களையும் நீக்கி எங்களைக் காத்து இரட்சித்து வாழவைப்பார் சனீஸ்வரன் என்றும் சகலருக்கும் நம்பிக்கை உண்டாக்கிவிட்டார்.

து. கிருஷ்ணசாமி
கன்னுதிட்டி, யாழ்.

# விமானம்

பருந்து போல் நீ வட்டமிட்டுப்
பறந்து செல்கின்ருய்!
பறந்து செல்கின்ருய்!!

விரைந்து மேல் எழுந்து நீயும்
விண்ணை இடிக்கின்ருய்!
விண்ணை இடிக்கின்ருய்!!

தரையைக் காணத் துடிதுடித்துத்
தாழ்ந்து வருகின்ருய்!
தாழ்ந்து வருகின்ருய்!!

இரைந்து எம்மை இராப்பகலாய்
ஏங்க வைக்கின்ருய்!
ஏங்க வைக்கின்ருய்!!

எந்திரத்தால் இயங்கி நீயும்
ஏவல் செய்கின்ருய்!
ஏவல் செய்கின்ருய்!!

விந்தை கொண்ட உன்னைக் கண்டு
விமானம் என்கின்ருர்!
விமானம் என்கின்ருர்!!

— தா. தேவமதுரம்

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ

# பிரசவ விடுமுறை பேதமும் தாக்கங்களும்

எமது நாட்டில் பிறக்கும் எதிர்காலச் சந்ததினராகிய குழந்தைகள் திடகாத்திரமாக வளர்க்கப்படல் வேண்டும் என்ற கோஷம் அண்மைக் காலத்தில் அடிக்கடி கேட்கும் ஒன்றாகும். இதுவரை காலமும் பெண் தொழிலாளர்களுக்கு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டு வந்த நாற்பத்திரண்டு நாட்கள் விடுமுறையானது மூன்று மாத காலமாக அதிகரிக்கப்படும் என்ற நம்பிக்கையும் எதிர்ப்பார்ப்புக்களும் பெண் உத்தியோகத்தர்கள் மத்தியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் இறுதியில் இதற்கான சட்டமும் எதிர்பார்த்ததைவிடவேருெரு உருவில் அரசாங்கத்தினுல் நிறைவேற்றப்பட்டு விட்டது.

1985 ஆகஸ்ட் மாதம் இது சம்பந்தமாக இரு திருத்தச் சட்டங்களைப் பாராளுமன்றம் ஆக்கியுள்ளது. ஒன்று மகப்பேற்று நன்மைகள் திருத்தச் சட்டம். இது அரசாங்கம். அரசாங்கத்துறைகள் அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றும் பெண்களுக்கு உரியது. அடுத்தது கடைகள். காரியாலய ஊழியர்களின் திருத்தச்சட்டம். இரண்டாவது சட்டம் அரசாங்கத்துறைகளற்ற நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு சட்டமாகும்.

சட்டத்தரணி

**மு. சிவலிங்கம்**

கம்பனிகள் கடைகள் முதலியவற்றில் வேலைசெய்யும்பெண்களுக்கு இரண்டாவது சட்டமும், கல்லூரி பாடசாலைகள் [அரசாங்க] என்பவற்றின் ஆசிரியைகள் மற்றும் அரசாங்கத் துறைகளில் கடமையாற்றும் பெண்களுக்கு முதலாவது அதாவது மகப்பேற்று நன்மைகள் திருத்தச்சட்டமும் பொருந்துகின்றது.

### மகப்பேற்றுத் திருத்தச்சட்டம்

மகப்பேற்றுத் திருத்தச்சட்டத்தின் கீழ் இனிமேல் ஏற்கனவே குழந்தையற்ற அல்லது ஒரு குழந்தையுள்ள பெண் அரசஊழியர் ஒருவர் குழந்தை ஒன்றினை உயிருடன் பெற்றெடுக்கையில் அவருக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்கப்படுகிறது. ஏற்கனவே இரண்டு குழந்தைகளுள்ள ஒரு அரசாங்க பெண் ஊழியர் ஒருவர் மூன்றாவது குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்கையில் அவருக்கு மூன்று மாத விடுமுறைவழங்கப்படமாட்டாது.

இவர்களுக்கான விடுமுறை முன்பு சகலருக்கும் வழங்கப்பட்டதினைப் போன்று ஒன்றரை மாதங்கள் மட்டுமே [ஆறுவாரங்கள்] உயிர் அற்ற பிள்ளையினைப் பெறும் தாய்மாரும் ஆறு வார விடுமுறைக்கே உரித்துடையவர்கள். பிள்ளையைப்பெற இருக்கும் தாய்மார்கள் தமக்கு உரித்துடைய விடுமுறைகளில் இரண்டுவார விடுமுறையைப் பிள்ளையைப் பெற்றெடுக்க முன்பு அதாவது பிரவசத்தின் முன்பே பெறல் வேண்டும். அவ்வாறு அதனைப் பெருது விட்டு அக்காலத்தில் அவர்கள் கடமையில் ஈடுபட்டிருப்பின் பிரசவத்தின் பின்பு அந்த விடுமுறைகளை உபயோகிக்கவோ அல்லது அதற்கான கொடுப்பனவுகளைப் பெறவோ உரித்துடைய வர்களாவார்கள்.

### கடைகள் காரியாலயச்சட்டம்

இச்சட்டத்தினுல் ஆளப்படுபவர்கள் அரசாங்க சேவையில் இல்லாத உத்தியோகத்தர்கள். அவ்வாருன பெண் உத்தியோகத்தர்களுக்கும், அதிகரித்த பிரசவ விடுமுறை இச்சட்டத்திருத்த மூலம் அளிக்கப்பட்டாலும் அது அரசாங்க பெண் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டதினை விடக் குறைவானதே. அதாவது எழுபது நாட்கள் மட்டுமே. இன்னொரு வகையில் கூறினுல் 10 வாரங்கள் அல்லது 2½ மாதங்கள் மட்டுமே. இவ்வகையான விடுமுறையையை உபயோகிக்க உரித்துடையவர்களாவர்கள். இதுவும் முதல் இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் போது மட்டும்தான். மூன்ருவது பிள்ளையினை அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்காக வழங்கப்படும் விடுமுறை 28 நாட்கள் மட்டுமே. உயிரற்ற பிள்ளைகள் பிறக்கும் இடத்தும் 28 நாட்கள் மட்டுமே வழங்கப்படும்.

### வேறுபாடும் தாக்கங்களும்

இங்கு முக்கியமாக இரு சட்டங்களுக்கும் இடையில்பாரிய வேறுபாடு காட்டப்படுகிறது. இது அரசாங்க உத்தியோகத்திற்கான மோகத்தினை அதிகரிக்கச்செய்யும் ஒரு முயற்சியாகும்.

ஒரு குடும்பத்தில் முதல் இரண்டு பிள்ளைகள் வளர்வதற்கு அளிக்கப்படும் சந்தர்ப்பம் மற்றப்பிள்ளைகளுக்கு அளிக்கப்படவில்லை. இயற்கை அமைப்பில் பிற்பகுதியில் பிறக்கும் பிள்ளைகளுக்கே அதிக கவனம் காட்டப்பட வேண்டும். இல்லையெனில் அவை பலவீனமான குழந்தைகளாகி விடுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. எந்தப் பிள்ளைபெற்ருலும் முன்பிருந்த சலுகைகள் ஏதாவது 42 நாட்கள் விடுமுறை அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையும் உண்டு. இதுவே அவர்களது மிகக்குறைந்தவிடுமுறைச் சலுகை. அதைப்போல் கடை, காரியாலய உத்தியோகத்தரினைப் பொறுத்தவரை 28 நாட்கள் அதிகபட்ச குறைந்த விடுமுறை. இது எத்தனை பிள்ளை பெற்ருலும் வழங்கப்படும். எனவே இந்த வேறுபாடுகள் சனத்தொகைப் பெருக்கத்தினைக் குறைக்க ஏதுவாகும் என்று கூறுவதற்கு இல்லை. எனினும் ஊழியர்களுக்குக் காட்டப்படும் இவ்வேறுபாடு அவரவர் வேலைகள் மிகவும் பாதிக்காது பார்ப்பதற்கு ஓரளவு உதவியாக அமைகின்றது. இருந்தபொழுதிலும், சகலருக்கும், சகலபிள்ளைகளுக்கும் மூன்று மாதகால விடுமுறை வசதிகள் வழங்குவதின் மூலம் இரண்டு மிக முக்கியமான இலங்கைப் பிரச்னைக்கு ஓரளவு எட்டகூடிய தீர்வினை அடையலாம் என்ற அபிலாஷையினை இந்த வேறுபாடுகள் புறக்கணிக்கின்றன. ஒன்று போஷாக்குள்ள நல்ல இளம் சந்ததியினை உருவாக்குதல். மற்றது வேலையற்ருேருக்கான தற்காலிக வேலைவாய்ப்பு வசதிகள், குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கானமுயற்சிகள் அவசியம்.

### சட்ட ஓட்டை

இவ்விரு சட்டங்களிலும் சில ஓட்டைகளும் காணப்படுகின்றன. முக்கியமான ஒன்றுயாதெனில்,ஏற்கனவே பிள்ளைகள் ஒன்றும் இல்லாதவருக்கு அல்லது ஒருபிள்ளை உடையவருக்கு மூன்றுமாத விடுமுறை அளிக்கப்படும். அல்லது இரண்டரைமாத விடுமுறை அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இது இரண்டு பிள்ளைகள் பிறந்து அவை இறந்த தாய்மாருக்குப் பிறக்கும் மற்றைய பிள்ளைகளுக்கும் மிக உயர்ந்த நன்மைகளைப் பெறுவதற்கா ₹ வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதைத்தான் சிலசமயம் சட்டம் கருதியும் இருக்கலாம்.

இந்தச் சட்டங்கள் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்டபோதும் எந்தத் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது என்று இச் சட்டங்களில் குறிகப்படவில்லை. இச்சட்டத்திலிருந்து சில நன்மைகளைப்பெறுவதற்கு நெடுங்காலமாகச் சில பெற்ருேர் ஆவலாக இருந்தார்கள். அவர்கள் எல்லாம் ஏமாற்றம் அடைந்துவிட்டார்கள். இச்சட்டம் வெளிவந்த காலத்திற்குச் சற்று முன்பிருந்தே இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாளுல் சில தாயாரும் பிள்ளைகளும் நன்மையடைய வாய்ப்புண்டு. இன்னமும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான சுற்று நிருபங்கள் வந்துசேரவில்லை என்ற பதிலைத்தான் தொழில் தருநரிடம் இருந்து பெறமுடிகின்றதாம்.

## ஓ"ஒண்ணுவைக்க மறந்திட்டான்"

பாரதி சிலகாலம் கடையத்தில் வசித்துவந்தார். அங்கே ஸ்ரீ ராமநவமி உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது, சங்கீதக்கச்சேரி கதாகாலட்சேபங்கள் என இரவெல்லாம் அமர்க்களம்!

தேவகோட்டை வித்துவான் ஒருவர் ''வள்ளி திருமணம்'' காலட்சேபம் செய்தார். மிருகங்கள் பயிர்களை அழித்துப் பாழ் செய்வதைத் தடுக்கும்படி வேடுவர்கள் சாமிக்குப் பூசை போட்டனர். அவர்களில் ஒருவனுக்கு ஆவேசம் வந்தது.

''பாக்கும் வைச்சான் பழமும் வச்சான்  
வெற்றிலை வச்சான் டோயிலை வச்சான்  
ஒண்ணு வைக்க மறந்திட்டான்  
சுண்ணும்பில்லே! சுண்ணும்பில்லே!''

என்று பாடினுன்.

சபையில் இருந்த பாரதியார் ''கொல்'' என்று சிரித்தார். அருகிலிருந்தவர்கள் ''ஏன் சிரிக்கிறீர்கள்'' என்று கேட்டார்கள். இந்தப்பாட்டு நம் நாட்டு மக்களுக்கும் பொருந்தும், தமிழ் மக்களுக்குக் கடவுள்.

''நிலமும் வச்சான் பலமும் வச்சான்  
நிகரில்லாத செல்வம் வச்சான்  
ஒண்ணு வைக்க மறந்திட்டான்  
புத்தியில்லே, புத்தியில்லே''

என்று பாடினுர். நண்பர்கள் விழுந்துவிழுந்து சிரித்தார்கள்.

**--செல்லம்மாள் பாரதி**

## எது வீரம்

வன்சொல்லாலும் கல்லாலும் கோழை அடித்திடுவான்  
இன்சொல்லாலும் அன்பாலும் வீரன் வென்றிடுவான்  
நாவடக்கம் உள்ளவனே மாவீரனுவானும்  
புலனடக்கம் உள்ளவனே தெய்வத்தின் சமனுவான்.

மண்ணுசை பொன்னுசை வெறுத்தவன் ஓர்வீரனெனின்  
பெண்ணுசை அற்றவனும் பெருமைமிகு வீரனே  
மரணந்தான் வந்திடினும் சொன்னசொல் தவருமை  
வரம்பெற்று வாழ்வதுவும் சத்தியத்தின் வீரமன்ருே.

மறப்போர் தொடுத்து யுத்தமுனை வெற்றிவீரம்  
அறப்போரில் அகிம்சைதனில் காண்பதும் வீரவெற்றி  
சிறப்பாக வாழ்வதற்கு அகிலமதில் கருணைஅன்பு  
மறவாத சிந்தனையுள் வாழ்வதுவும் வீரமே.

**— செல்வி கார்த்தியாயினி தவனேஸ்**

திருவருகைக்கால 4ம் ஞாயிறு

## ஞாயிறு சிந்தனை

வண, வின்சென்ற் பற்றிக் அ. ம. தி.

''பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வரநான் வாய்ப்புப் பெற்றது எப்படி? ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறுபெற்றவளே'' [லூக். 1: 42, 45] என்று எலிசபெத்து மரியாளைப் புகழ்ந்து கூறுகின்ருள்.



எங்கு தேவையோ அங்கு சேவை என்ற உணர்வோடு மரியாள் பிறரன்புப் பணியில், ஈடுபட்டதை இன்றைய நற்செய்திவாசகம் [லூக். 1:39-45] எமக்கு நினைவூட்டுகின்றது. பிறரின் தேவைகளை நிறைவு செய்வதில் பிறரின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்வதில் மரியாள் சிறந்து விளங்குகின்ருள்.

கிறிஸ்துவின் பிறப்புப்பெருவிழா இன்னும் மூன்று நாட்களில் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்வேளையில் கிறிஸ்து இயேசு எங்கள் ஒவ்வொருவரோடும் தொடர்பு கொண்டு உறவுகொள்ள விரும்புகின்ருர். எமது உள்ளங்களில் இல்லம் அமைக்க உரிமையுடன் தேடி, ஓடிவருகின்ருர். வறுமையினில் வாடுவோரில் அகதிகளாய் சொந்த வீடு இன்றி அல்லல்படுதோரில், துணையின்றி கைவிடப்பட்டோராய் வாழ்வோரில். நாளாந்த உணவிற்காகக் கூலி வேலை செய்து உயிர்பிழைப்போரில் கிறிஸ்து வாழ்வது புலப்படுகின்றதா?

ஏழையர்களை மகிழச் செய்வதில் கிறிஸ்து பிறக்கின்ருர். அழுபவர்களுக்கு ஆறுதல் அளிக்கையில் கிறிஸ்து பிறக்கினருா. அயலவரை மன்னித்து, அன்பு செய்வதில் கிறிஸ்து பிறக்கின்ருர். நாணயமான பேச்சுக்கள், நம்பகரமான செயற்பாடுகள், பிறரன்பை வளர்விக்கும் வாழ்க்கை முறைகள் போன்றவையே எமது உள்ளங்களில் கிறிஸ்துவைப் பிறப்பிக்கும் இறையன்பிற்கும் பிறரன்பிற்கும் ஏற்புடையவர்களாக எம்மை மாற்றிக் கொள்வதன் மூலமே 'கிறிஸ்மஸ்' பெருவிழாவைக் கொண்டாடத் தகுதியுடையவர்களாகின்ருேம்.

## மீண்டும் உயிர்ப்பார்

அன்று  
பசுக்கள் தொழுவிலே  
பாலன் உதித்தான்-மன்னன்  
பாலகர்களை அழித்தான்  
வானம் இடிந்து  
கண்ணீர் பொழிந்தது  
வளர்ந்தான்பாலன்  
கிலுவையில் அவனே  
சித்திரவதைப்பட்டான்  
செத்தான்!  
சிலையானுன்!  
செத்தபின் உயிர்த்தான்  
செய்தவனைச்  
சிந்திக்கவைத்தான்  
இன்றும் செத்தவன்  
உயிர்ப்பான்  
சிந்திக்க வைப்பான்

— **பசுவூர்க் கோபி.**

## நாவலர் நன்மொழிகள்

### குளந்தோண்டுதல்

குளம் இல்லாத ஊரிலே குளம் தோண்டுவித்தல் வேண்டும். தூர்ந்த குளத்திலே தூர்வாருவித்தல் வேண்டும். படித்துறையில்லாத குளத்துக்குப் படித்துறை கட்டுவித்தல் வேண்டும். ஸ்நானம், சந்தியாவந்தனம், தீர்த்தபானம் முதலியவைகளுக்கு உபயோகமாகும் குளங்களை சௌசஞ் செய்தல், அழுக்கு வஸ்திரந் தோய்த்தல், இருதுவுடைய பெண்கள் ஸ்நானஞ் செய்தல், இலை முதலியவைகள் விழுந்து அழுகுதல் முதலியவைகளினுல் அசூசி அடையாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

### வீட்டுக்கொல்லை

யாவரும் தங்கள் தங்கள் வீட்டுக் கொல்லைகளிலே உபயோகமாகும் பயிர்களையும், சிறந்த மரங்களையும், அழகிய புஷ்டச் செடிகளையும் வைத்து அந்தக் கொல்லைகளை மிகச் சிறப்பித்தல் வேண்டும். இத்தன்மையுடைய கொல்லைகளிலே உண்டாகும் நல்லகாற்று ஆரோக்கியத்தை விளைவிக்கும்.

### ஆரோக்கியம்

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னை விழித்தெழுந்தால் புத்தி தெளிவடையும்; நரம்புத் துவாரத்து நீர் சுத்தியுறும். பித்தம் நீங்கும். வாத பித்தங்கள் தத்தம் நிலையைப் பொருந்தும். காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ்செய்து கொண்டுவருதல் போலவே, அதனின்று பிரியும் மலசாதிகளை ஒழுங்காக மோசனஞ் செய்து கொண்டு வருதலும் ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

நன்றி:

**மில்க்வைற் செய்தி**

# இவ்வாரம் எப்படி?

மாதம் — மார்கழி 7
[1985-12-22] ஞாயிறு
திதி - ஏகாதசி பின்
இரவுவரை
நக்ஷத்திரம்—அச்சுவினி
பிற்பகல் வரை

## மேடம்

எந்த விடயத்திலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும். உடல் நிலையிலும் அதிக கவனம் செலுத்தவும். பொதுவாக இவ்வாரம் உடற் சோர்வுக்கும் தொழில் மந்த நிலைக்கும் இடமுண்டு.

## இடபம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிரச்னைகள் பல நல்ல முடிவைத் தரும். பேச்சில் நிதானம் பெருமையைத் தரும். தொழில் விடயங்களில் திருப்திக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும். சிநேக வழியால் நன்மைகள் உண்டு.

## மிதுனம்

சிலர் வாழ்க்கையில் பிரிவு வேதனையைத் தரும். பணம் பறி போவதற்கு இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர் ஒருவரின் விடயமாகச் சஞ்சலப்படக் கூடும்.

## கடகம்

சுற்றுடலில் புதிய உற்சாகம் ஏற்படும். உள்ளத்தில் உறுதி தோன்றும். தாய் வழியால் பெருமைகள் சேரும். சுகத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகளும் வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுவோருக்கு மகத்தான வாரம்.

## சிங்கம்

மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோள்களிலும் வெற்றி உண்டு. முதியவர் ஒருவர் நல்வழி காட்டுவார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

## கன்னி

ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்குவதால் பிணக்குகள் தோன்றும் வீட்டில் சிறுபிணி தலைதூக்கும். சிறிய விடயத்திற்குக் கூடப் பெரிய கோபம் தோன்றக் கூடும். வாகனச் சாரதிகள் இவ்வாரம் அவதானம் வேண்டும்.

## துலாம்

சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும். காதலர்களுக்குக் கனிவான வாரம். சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்குக் களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும்.

## விருச்சிகம்

கடமைகளில் தடை ஏற்படும். பிறர் நம்பிக்கையைத் தவிர்த்துக்கொள்ளவும். தீர்க்கமான சிந்தனையால் சிறப்புக்கு இடமுண்டு. சிறு பிணி வாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

## தனுசு

புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு தோன்றும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்னிற்பீர்கள். தெய்வ, குரு பக்திக்கும் இடமுண்டு. மற்றவர்கள் உங்களைப் பின்பற்றக் கூடிய சூழ்நிலை உருவாகும். குருவின் ஆசியும் உண்டு.

## மகரம்

வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும். இதமான வாழ்வு இன் சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய் தொழிலாலும் சிறப்புண்டு. மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

## கும்பம்

வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். சகோதர வழியாலும் சிறப்புண்டாகும். புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும். புதுமையான எண்ணங்கள் தலை தூக்கும். பூமியால் முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

## மீனம்

வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## சுவிஸ்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளிகளாகக் காணப்பட்டால் 15 வருடங்களுக்குக் குறையாத சிறை கிடைக்கிறது. சிலநாடுகளில் மேலும் கடுமையான தண்டனைகள் சுவிஸ்ஸில் தமிழ அகதிகளை வைத்திருக்க விரும்பாததற்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகவுள்ளது.

எனவே இலங்கையில் வாழ வழியில்லை என்று சுவிஸ் போன்ற நாடுகளுக்குப் பறந்து வரும் நம்மவர்கள் தமது வாழ்வை வளம்படுத்த முயற்சிப்பதைவிடுத்து பாழடிப்பதில் இறங்குவதா?

மனிதாபிமான ரீதியில் அனுதாபம் தேட முயலும் நாம் மனிதாபிமானமாக நடந்து கொள்வதே புத்தி சாலித்தனம்.

# கொஞ்சம் கண்ணீர் சிந்துவோமா?

''செல்வன் சி. நிமலன் மழலை மாருப்பருவத்தில் 1982ம் ஆண்டு எங்கள் பாடசாலையில் மாணவனுகச் சேர்ந்தார். அதே மழலைப் பேச்சும், இனிய சுபாவமும், பண்புடன் பணிவு கலந்த குணமும் அவரிடம் வளர்ந்து வந்தன.... பாடங்களிற் சிறந்து விளங்கி வகுப்புக்கு நற்பெயர் ஈட்டித் தந்த நிமலன் ஆங்கில எழுத்துப்போட்டி, ஆங்கிலப்பாட்டுப்போட்டி போன்றவற்றில் திறமைகாட்டிப் பாடசாலைக் குப்புகழ்தேடித்தந்தார்.......''

-இப்படி அடுக்கிக்கொண்டு போகிறுர் அப்போது யாழ், இந்து ஆரம்பவித்தியாலய அதிபராவிருந்த திரு. செ. கனகரத்தினம் அவர்கள். இது அதிபரின் இரங்கலுரை. மழலை மாருப்பருவத்தில் அந்த நிமலன் எமது மண்ணுக்குத் தனது இரத்தத்தால் சிவப்பேற்றிச் செத்து விட்டான். ஆம், கடந்த ஆண்டு இப்படியொரு மார்கழி மாதத்துத் திருவெம்பாவை காலத்துப் பகற்பொழுதில் யாழ். நகர அமளியின் மத்தியில் துப்பாக்ரவை அவன் உயிரை பலி கொண்டது. 'யாழ். நகரில் நேற்று நடந்த திகில் நாடகம்; ஆயுதப்படை சுட்டதில் தந்தையும் மகனும் பலி' என்ற செய்தி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்ததல்லவா? அந்த மகன்தான் நிமலன். தந்தை - நிமலனின் தந்தை தான்! இறக்கும்போது அந்த தமிழ்த் தியாகிக்கு வயது பத்து!

கல்வியில் சுட்டியாய்த் துலங்கிய நிமலன் பக்தியில் மிக்கவனுகவும் திகழ்ந்தான். அவன் ஏழாவது பராயத்தில் ஒரு கதை எழுதினுன். அவன் பக்தி உள்ளத்திற்கு அந்தக்கதை ஓர் எடுத்துக்காட்டாகும். அவன் எழுதிய கதையை அப்படி அப்படியே எழுத்துத்தவருமல் இங்கேவாசகர்களுக்குத் தருகின்ருேம்.

ஆ-ர்

## கதை

ஒரு ஊரில் ஒரு ஏழைப் பொடியன் இருந்தான். அவன் பிள்ளையாரில் அதிக நம்பிக்கை உடையவன். அவனுக்குத் தாயும் இல்லை. தகப்பனும் இல்லை. அவன் பசியால் வாடினுன். அவன் காட்டுப்பாதையில் இருப்பான். ஓர் நாள் அந்தவழியால் ஒரு பழவியாபாரி வந்தான். அவனைக்கண்ட அந்தப் பொடியன், அய்யா இந்த ஏழைக்கு ஒரு பழம் தாருங்களே என்று கெஞ்சிக் கேட்டான். ஏய்போடா உனக்கும் யாரும் பழம் தருவார்களா என்று கேவளமாக பேசி விட்டு போய்விட்டான். அதன் பின் அந்த ஏழைப் பொடியன் சிறிதுதூரம் போனுன். அங்கே ஒரு சிறு பாளடைந்த பிள்ளையார் கோவில் இருந்தது. அந்த கோயிலைநோக்கி ஓடினுன். உள்ளே போய் பார்த்தான். அங்கே ஒரு மட்டையில் இந்த கோயிலை சுத்தப்படுத்துவோருக்கு எல்லாம் நன்மைஎன்று எழுதியிருந்தது. அந்த கோயினுட் பணக்காரர்கள் பெரும் பெரும் பெரும் பணக்காரர்கள் வந்திருப்பார்கள் அந்த மட்டையை பார்த்திருப்பார்கள். ஆனுல் இந்தமட்டையை ஆரோ மொக்கன் எழுதியிருப்பார்கள் என்று நினைத்திருப்பார்கள். ஆனுல்இந்த ஏழைப் பொடியன் சிறுதும் தயங்காமல் அந்த வேலையை செய்யத் தொடங்கினுன். பிள்ளையார் சந்தோசப்பட்டார், மனமிரங்கினுர். அந்த ஏழைப்பொடியனின் பக்தியை கண்டார். மகிழ்ச்சியடைந்தார். இவனை சோதிக்க நினைத்தார். அவர் என்னசெய்தார் தெரியுமா. யானை ஒன்றை அனுப்பினுர். யானை ஒரு பெரும்கொப்பை உடைத்துக்கொண்டு வந்தது. அதைக்கண்டபொடியன் பயப்படவில்லை. பிள்ளையாரே என்று கத்திக்கொண்டு பிள்ளையார் சிலையை கட்டிப்பிடித்தான்.

பின்பு யானையைக் காணவில்லை. அப்பொழுது அவன் மெதுவாக எழும்பி பின்பும் வேலையைத் செய்யத் தொடங்கினுன். சுத்தப்படுத்தியபின் பக்கத்தில் ஒரு செம்பி இருந்தது, பக்கத்து ஆறுக்கு சென்ருன். தண்நீரை அள்ளி அள்ளி கழுவினுன். கழுவியபின் பூக்கள் புடுங்கி வந்து பிள்ளையாருக்கு வைத்தான். வடிவாக சோடித்தான். பின்பு பிள்ளையாரை வணங்கினுன். பிள்ளையாரே நீங்கள் எனக்கு ஒரு வளி காட்டவேனும் என்று வேண்டினுன். பின்பு கோயிலுக்குள் இருந்து ஒரு குரல் கேட்டது. நீ நல்லவன் நீ ஓர் ஏழை என்ருலும் நீ தயங்காமல் இந்த வேலையை செய்துவிட்டாய் நீ உண்மையான பக்தன் நீ போய்வா என்று ஒரு குரல் கேட்டது பின்பும் பிள்ளையாரை வணங்கி விட்டு ஓர் அடி எடுத்து வைத்தான் பெரும் பணம் மூட்டை இருந்தது. அதை அவன் எடுத்து கொண்டு போனுன் போன உடன், 25 மேசன்களை கூப்பிட்டு அந்த கோயிலை பெரும் கோயிலாக்கினுன். கும்பாவிசேகம் வைத்தான். அவனும் கொஞ்சக்காசை எடுத்து ஒரு வீடுகட்டினுன். தனக்கு செலவுக்கும் வைத்துக்கொண்டு மிச்சத்தை ஏழைகளுக்கும் அன்னதானத்துக்கும் கொடுத்தான். பின்பு அவன் செல்வாக்காக இருந்தான். பிள்ளையாரை மட்டும் மறக்கவில்லை. பின்பு அவனுக்கு எந்தவித இடஞ்சலும் வரவில்லை அவன் தன்வீட்டுக்குப் பக்கத்தில் இன்னெரு பிள்ளையார்கோயில் கட்டினுன் சந்தோசமாக இருந்தான்.

## சின்னம்

அரசியல் மேடையில்
அடிக்கடி தோன்றி
காட்சிக்குக் காட்சி
கட்சி மாறிய
அரசியல் வாதிக்கோ
தேர்தல் காலத்தில்
தேடிக் கிடைத்தது
'குரங்குச்' சின்னம்

## வறுமைக்குரல்

வறுமைப் பற்கள்
குடல்களைத்
தின்றதால் தான்
பசியே எமக்குப்
பழக்கமாய்ப் போனதோ?

## சிவப்புவிளக்கு

புகுந்த வீட்டில்
மணைவிளக்காய்
குலம்விளக்கவேண்டியவள்
சீதனத்திரியின்மையால்
தெருக் கோடியில்
சிவப்பு விளக்காளுள்.

— பசுவூர் செல்வன்.

## சீதனம்

சீதனமின்மையால்
நாற்பதிடத்தில்
சம்பந்தம்பேசி - சரிவராமல்
''சீ?'' எனவெறுத்து
இரண்டாம் தாரமாய்
கரம்பிடித்தவளும்
இன்று தன் மகனுக்கு
இலட்சங்கள் கேட்கிறு.

— சத்தியமணுளன்.

பலவருடங்களாக யாழ். மாவட்ட மாணவர்களின்
அன்றுடதேவைகளை நாமே நிறைவு செய்து வருகிறேம்

1986-ம் ஆண்டிலும்
உங்கள் தேவைகளை நிறைவு செய்வோம்

அப்பியாசக் கொப்பிகள்
(இலங்கை அரசாங்கத்தின் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினுல் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுஸ்தாபன கொப்பிகள்)

- பாடசாலை உபகரணங்கள்
- காகிதாதிகள்
- மின்சார உபகரணங்கள்
- மின்னியல் பொருட்கள்
- அலங்கார சாதனங்கள்

இம்மாதம் 23-ந் திகதி முதல் எமது நிறுவனம் பாடசாலை மாணவர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகளின் நலன்கருதி பொங்கல்தினம் வரை சகல விடுமுறைதினங்களிலும் காலை 8-00 மணி முதல் மாலை 7-00 மணி வரை திறந்திருக்கும்.

கொழும்பு விலையில் யாழ்நகரில் விற்பனைசெய்யும் ஒரே நிறுவனம்:

அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

### லிடோ சினிமா

10-30, 2-30, 4-30, 6-30

இலகரேனிக் சுருமீனின் சாகசக் காட்சிகள் நிறைந்த

JAWS III

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30

சிவகுமார்-பிரமிளா நடித்த

பாலச்சந்தரின்

அரங்கேற்றம்

25-ந் திகதி முதல்

நான் பாடும் பாடல்

### எம்பயர்

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30 9-15

சிவகுமார் - அம்பிகா

க ்பூரதீபம்

### உஷாமினி

10-30, 2-30, 4-45, 6-45

AMERICAN WARRIOR

---

### யாழ்ப்பாணம்
### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### (வரைவுள்ளது)

இல. 257, யாழ்ப்பாணம், மின்சாரநிலையவீதியில் அமைந்துள்ள கிளை இல. 39ல், தளபாடங்கள் ஏல விற்பனைக்குண்டு.

### ஏல விற்பனை

இடம்:- இல. 257 மின்சார நிலைய வீதி

காலம்:- 26-12-85

நேரம்:- காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை

நல்ல நிலையிலுள்ள பிடவைகள் காட்சிப்படுத்தும் தேக்கு மரத்திலான கண்ணுடி அலுமாரிகள், சுந்தோர் பாவிப்புக்கான முதிரை மேசைகள், கதிரைகள், முக்காலிகள், கடைகளுக்கான ருக்கைகள், பட்டறைகள் ஆகிய தளபாடங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்.
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
18-12-85. [2542]

---

### உப்பு உற்பத்திப் பொருட்கள் கொள்வனவில் ஈடுபடும் வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
### ஓர் அரிய சந்தர்ப்பம்

ஆனையிறவு, குறிஞ்சாதீவு உப்பளங்களிலிருந்து விசேட மலிவுவிலையில் ஒரு மெட்ரிக் தொன் உப்பு ரூபா 433/- வீதம் தற்போது விற்பனை செய்யப்படுகின்றது. உப்புக் கொள்வனவுக்காக, மக்கள் வங்கியில் இருந்து பெறப்படும் வங்கிக் கட்டளைகள் தலைமைக்காரியாலயத்திலும். ஆனையிறவு பிராந்திய காரியாலயத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிராந்திய
முகாமையாளர் (வ.பி)
இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
வட பிராந்திய அலுவலகம்,
ஆனையிறவு.
17-12-85.

2523

---

## மணிக்கூடு திருத்துநர்களுக்கு
## ஓர் அரிய சந்தர்ப்பம்

யாழ். நகரில் பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு மணிக்கூடு திருத்துவதில் நன்குதேர்ச்சி பெற்றவர்கள் உடன் தேவை. தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். தங்குமிட வசதி இலவசமாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2505, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2505

---

## 1-வது ஆண்டு நினைவுதினம்
### இராசையா கதிரமலர்
(இணுவிலூர் ஆசிரியஜோதி)



மலர்வு:
12-10-1942
இணுவில்

உதிர்வு:
3-01-1985
பூநகரி

திதி: 22-12-1985

அன்பென்னும் இன் அமுதம் ஊட்டி ாசமுடன்
எம்மை அரவணைத்த நீர் அமரதீபமாய் என்றும்
எமது இதயத்தில் ஒளிவீசுவீர்)
உமது ஆத்மசாந்திக்காக என்றும் இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

தாயார், மனைவி, சகோதரர்கள், மாமியார்.
சூராவத்தை, சுன்னுகம். 2539

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து
### செல்வி தெய்வேந்திரன் நிந்துஜா



இல. 610, காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் சிவஜெயந்தி தம்பதிகளின் சிரேஷ்டப்புத்திரி நிந்துஜா இன்று (22-12-85) தனது முதலாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா குடும்பத்தினர், அம்மப்பா, அம்மம்மா குடும்பத்தினர், குடும்ப நண்பர்கள் நிந்து சகல சௌபாக்கியங்களும் பெற்று சீருடன் சிறப்பாக சிறந்த கல்வி பெற்று வாழ வாழ்த்துகிறார்கள். 2551

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### திரு. வைத்திலிங்கம் பொன்னுச்சாமி
(கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதமலிகிதர்)



தோற்றம்:
20-3-1903

மறைவு:
22-11-1985

கடல் படகினில், திசைகாட்டி போகும் பயணத்தில்
கைகாட்டி பாதையைத் தெரிவிக்கும்
வழிகாட்டி நீயே எங்கள் உயிர் நாடி.

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [2506]

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## அறிவித்தல்

அரசாங்க ஓய்வூதியர் நலன்கருதி 27-11-85 இல் நிகழ்ந்த நிகரத்தில் அந்தியகால நிதியுதவி முறையை அங்கத்தவர்கள் ஏகமனதாக அனுமதித்துள்ளனர்.

ஒவ்வொரு அங்கத்தவரும் முற்பணமாக ரூபா 300/- கட்டி, பின் 20 மாதங்களுக்கு ரூபா 25/ வீதம் பங்குப்பணத்தை ஒவ்வொருமாதமும் 25-ம் திகதி அல்லது அதற்கு முன்னும் கட்டலாம். குறித்த தொகை ரூபா 800/- நிதிக்குக் கட்டியவுடன் வைப்புப் புத்தகம் கொடுக்கப்படும். இக்கால எல்லைக்குள் மரித்தால் கட்டியபணம் உடன் கொடுக்கப்படும்.

1-9-87 தொடக்கம் அந்தியகால நிதி செயல் முறைப்படுத்தப்படும். மரிப்பவர் ஒருவருக்கு ரூபா 3,500/- வழங்கப்படும்.

கீழ்க்காணும் ஓய்வூதியர் அந்தியகால நிதி உதவி நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

[1] ஸ்ரீமான் த. இராசதுரை,
[2] ஸ்ரீமான் சி. நாகலிங்கம்,
[3] ஸ்ரீமான் க தம்பியப்பா.

சேரவிரும்பும் ஓய்வூதியர் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

1-1-1986 இலிருந்து அந்தியகால நிதி உதவி நடைமுறைப்படும்.

க. தம்பியப்பா
பொருளாளர்

சி. நாகலிங்கம்
செயலாளர்

முகவரி:

திரு. வ. மாணிக்கம்,
தலைவர்,
திருநெல்வேலி-கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கவனிக்கவும்:
''ஓய்வூதியம்'' என்னும் பத்திரிகை 1986-ம் ஆண்டு பங்குனி தொடக்கம் மலரும். [2529]

---

## 10-ம் வருட நினைவஞ்சலி
### பேபி றஞ்சிலற் கொன்சி சவிரிமுத்து



அன்னைமடியில்:
1964-09-24

ஆண்டவன் அடியில்:
1975-12-25

ஆண்டுகள் பத்து உருண்டாலும்
அன்பு நெஞ்சங்கள் எரியுதம்மா
ஆண்டவன் அடியில் நீர் வாழ
அனுதினமும் நாம் வேண்டுகிறோம்.
இவரின் ஆன்மசாந்திக்காக 24-12-1985
காலை 6 மணிக்கு யாழ். புனித அடைக்கல
அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி
ஒப்புக் கொடுக்கப்படும்.

8, இராசாவின் தோட்டம் லேன்,
யாழ்ப்பாணம்.
(25 9)


அன்புத்தாயார்,
சகோதரர், உறவினர்.

---

உ
சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பு

23-11-85 இறைபதமடைந்த எமது குலவிளக்கு



### திருமதி தம்பையா இராமாசிப்பிள்ளை

அவர்களது அந்தியேட்டி 23-12-1985 திங்கள் காலை நயினாதீவு தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியைகள் நண்பகல் இல்லத்திலும் நடைபெறும்.

நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு அன்னையின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மகன், மருமக்கள், பேரர், பீட்டர்.
நயினாதீவு-6. 2546

## சபையில் விவாதம்:

# 'நீர் புத்திக் கூர்மையானவர்

— அனுரா

# 'உமது அம்மாவால்பிரச்னை'

— தொண்டா

(கொழும்பு)

அனுரா: ''இந்தநாடு இதுவரை கண்டிராத புத்திக் கூர்மைமிக்கதலைவர் தொண்டமான்'' தொண்டமான்: எமது பிரச்னையை உமது அம்மா 15 வருடங்களில் தீர்த்துவைப்பதாகக் கூறினர். ஆனல் 23 வருடங்கள் கழிந்துவிட்டன பிரச்னை தீர்ந்தபாடில்லை''

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்காவும், கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானும் நேற்றுக் காரசாரமாக பாராளுமன்றத்தில் விவாதஞ்செய்தனர்.

திரு. அனுரா: ''எந்த நேரத்தில் எப்படியான தந்திரோபாயங்களைச் செய்ய வேண்டுமென திரு. தொண்மானுக்குத் தெரியும் அவர் தமது பிரச்சனையைத்தீர்க்க ஆயுதம் ஏந்தாமலே போராடுகிறர். தைப்பொங்கல் தினத்திலிருந்து 3 மாதங்களுக்கு காலை 7 மணிமுதல் 11 மணி வரை அவர் பிரார்த்தனை நடத்தப்போகிறர். இந்த நேரந்தான் கொழுந்து பறிக்கும் நேரம்.

தொண்டமான்: எமதுபிரச்னைகளுக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. அதனல் அப்பிரச்னையின் தாக்கத்தை இந்நாட்டு மக்களுக்கு உணர்த்தப்போகிறேம்''

அனுரா: நீங்கள்93ஆயிரம் பேருக்கு பிரஜாவுரிமை கேட்கிறீர்களா? அல்லது 4 லட்சத்து 33 ஆயிரம் பேருக்கு பிரஜாவுரிமைகேட்கிறீர்களா,

தொண்டமான்: இப்பிரச்னையை உமதுஅம்மா 15வருடங்களில் தீர்த்து வைப்பதாகக் கூறினர் ஆனல் 23 வருடங்கள் கழிந்துவிட்ட இதுவரை தீர்வு இல்லை உழைக்கும்எமது இனம் உரிமைஇன்றி இருப்பதா?

அனுரா: தோட்டத்தொழிலாளர் பிரச்னைக்குசகல அரசுகளும் பொறுப்பாகும் நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் தலவாக்கொல்லையில் சுமார் 5000 பேர் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். அவர்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதோடு கைது செய்யப்பட்ட ஒருவரை விடுதலைசெய்ய வேண்டுமென்றும், அதற்காக பொலிஸ் நிலைய அதிகாரி மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் கூறினர். அவர்கள் குண்டுகளைக் கொண்டு வரவில்லை. தடி. பொல்லு, கல்லு போன்றவற்றையே எடுத்துவந்தனர்.

தொண்டமான்: கைது செய்யப்பட்டவர் நிர்வாணமாக வீதியில் இருந்து விரட்டப்பட்டது எமக்குத் தெரியும்.

அனுரா: அவர் சட்டப்படி தான் கைதானர்.

தொண்டமான்: ''நீர் ஒரு போதும் சரியான தகவல்களைப் பெறுவதில்லை. உமக்கு இந்தத் தகவல் தர்தது யார் என்று எனக்குத் தெரியும்.

அனுரா: ''நீர் மிகவும் புத்திக்கூர்மையுடையவர். இங்கிருந்துகொண்டே பொலிஸ் நிலையத்தை முற்றுகையிடச் செய்துள்ளீர்கள்; அந்தளவுக்கு சக்திவாய்ந்த மனிதர் நீங்கள்.

## மட்டக்களப்பில் 100 பேர் கைது

[கொழும்பு]

மட்டக்களப்பில் நேற்றுக் காலை 100 பேர் கைது செய்யப்பட்டனர். திடீரென நகர்ப் பகுதியில் வந்திறங்கிய பொலிஸ் அதிரடிப்படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

கைதானவர்களில் அநேகர் குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட சிறுபராயத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிலமணி நேர விசாரணையின்பின்னர் இவர்களில் அநேகர் விடுகலையானர்கள். மிகச்சிலரே விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர். (யு)

## 4 பேர் மரணம்

[1-ம் பகத் தொடர்ச்சி]

பட்டு, மரக்கிளை ஒன்று முறிந்து மின்சாரக் கம்பிகளையும் அறுத்து நிலத்தில் வீழ்ந்தது,

ஹெலிகாப்டர்கள் பறந்து திரிந்த இரைச்சல்களும். துப்பாக்கிச்சூடு, குண்டுவெடிப்புச் சத்தங்களும் யாழ் குடாநாட்டை கதிகலங்கவைத்தது. மக்கள் எந்நேரமும் ஆபத்து நிகழலாம் என்றநிலையில் அஞ்சியிருந்தனர்.

இதனல் நேற்றுக் காலை தொடக்கம் யாழ் நகரில் சில கடைகள் மாத்திரம் ஒற்றைக்கதவுகளில் திறந்திருந்தன. மற்றைய இடங்களிளெல்லாம் அதிகமான கடைகள் மூடப்பட்டிருந்தன வீதிகளிலும் வாகனங்களினதும் பொதுமக்களினதும நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. (மா)

## தமிழ்த் தீவிர---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு பேசும் போதே ஜனதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனதிபதி தென் இந்தியாவில் ஐந்துகோடி தமிழ்மக்கள் உள்ளார்கள், அங்குள்ள தமிழ்த் தலைவர்கள் இலங்கை இனப்பிரச்னையைபயனபடுத்தி தென் இந்திய மக்களை ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். இந்த நிலைமையில் இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்னையை மிக அவதானமாகக் கையாள வேண்டியது அவசியம்'' என்றும் கூறினர்.

[ரா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## அமைதிக்குழு இலங்கை வருகிறது

[சென்னை]

இலங்கையில் வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வரவும் அமைதியை நிலைநாட்டவும் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணஉதவுமுகமாகவும், சமயமும் சமாதானத்துக்குமான உலக மாநாட்டு அமைப்பின் தூதுக்குழு ஒன்று விரைவில். இலங்கைக்கு வரவுள்ளது,

இத் தகவலை இன்று காந்தி கிராமத்தில் இவ்வமைப்பின் இந்திய தேசிய மாநாட்டில் பேசிய காந்திப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் இக்குழுவில் இந்தியா பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து 5 பிரதிநிதிகள் இடம்பெறுவரென்றும் இவ் விஷயம் தொடர்பாக இவ் அமைப்பைச் சேர்ந்த திரு. ஜோன் டெய்லர் ஏற்கனவே இலங்கைக்கு சென்றுவந்துள்ளதாகவும் அங்குள்ள சர்வோதய இயக்கத்தின் அழைப்பின் பேரிலேயே தமது தலைமையிலான இக் காந்தியவாதிகளின் குழுசெல்லவுள்ளது என்றர்.

## போராளிகளுடன்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இத்தாக்குதல்களின் போது அப்பகுதியிலுள்ள சில வீடுகளும் மில் ஒன்றும் துப்பாக்கி குண்டுகள் தாக்கி சிறுசேதமடைந்துள்ளன. ஆங்காங்கே துப்பாக்கி ரவைகளும்வெற்று ரொக்கட் லோஞ்சரின் சில பகுதிகளும், ஹெலிகாப்டரிலிருந்து வீசப்பட்ட சிக்னல் குண்டுகளின் உதிரிப்பாகங்களும் அப்பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### இருவர்கைது

இச்சம்பவத்தின் பின்னர் இணுவிலைசசேர்ந்த ஆசிரியர் ஒருவரின் மகன் அவரின் வீட்டில் வைத்தும், பால் விற்பனை செய்யும் இளைஞரும் ஆயுதப் படையினரால் கைது செய்யப் பட்டதாகப் புகார் செய்யப் பட்டுள்ளது.

ஆகாயத்திலிருந்து ஹெலிகொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிரேஷ்ட போராளி ஒருவரும் மற்றும் பொதுமக்களில் மூவரும் கொல்லப்பட்டதாகவும் 10 பொதுமக்கள்வரை படுகாயமுற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது'

ப காயமடைந்தவர்கள் அரசாங்க, தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹெலிகாப்டர்கள் தங்கி நின்ற இடமும், ஆயுதப்படையினர் சென்றபாதையும் இரத்தக்கறைகள் மிகுந்திருக்கக் காணப்பட்டன. ஐந்து அல்லது ஆறுபேர் படுகாயம் அடைந்திருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் என அவ் வட்டாரத்திலுள்ள சிலர்தெரிவித்துள்ளனர். [மா]

## 10 பேர் வரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மானிப்பாயைச் சேர்ந்த த. தங்கராணி [35 வயது] மேற்கண்டவாறு கூறினர்.

தங்கராணியின் தோள்மூட்டிலும், நெஞ்சின் மேற்பகுதியிலும் சூட்டுக்காயம் ஏற்பட்டுள்ளன.

கொக்குவிலைச் சேர்ந்த சி. சர்வேஸ்வரியும் [20 வயது] சூட்டுக்காயங்களுடன் யாழ். அஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலையிலிருந்து வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டதைத்தொடர்ந்து பயத்தினல், மற்றும் சிலருடன் வேறு ஒரு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது மேலிருந்துவந்த குண்டொன்று தாக்கியதால் காயமேற்பட்டதாக சர்வேஸ்வரி கூறினர்

இவருக்கு கழுத்தின் கீழ்ப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த இவ்விருவருக்கும் நேற்று அவசரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தில் சுமார் 10 பேர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. சிலர் தனியார் மருத்துவநிலையங்களுக்கு சென்றதாகவும் கூறப்படுகிறது.

---

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவரத்தினம்

(உரும்பிராய் சந்தி)

செல்லையா சிவரத்தினம் காலமாகிவிட்டார். இவர் பிரபல வர்த்தகரும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், உமாதேவி, பத்மாதேவி, கமலாதேவி, சிறீதேவி, சந்திராதேவி, அபிராமிதேவி, சிவகுமாரன், திருமுருகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், குணபாலசிங்கம் (முன்னள் அதிபர், வைத்தீஸ்வரா வித்தியாலயம்], வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசம்மா ஆகியோரின் சகோதரரும், உரும்பிராய் சந்தி வர்த்தகர் திரு. திருமதி முத்துக்குமாருவின் மருமகனுமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று 22-12-85 பி. ப. 2-00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேம்.

தகவல்: சீ. சிவகுமாரன்
உரும்பிராய்.

[2563]

---

## மரண அறிவித்தல்

### கதிரவேலு முருகேசு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. கதிரவேலு முருகேசு நேற்று முன்தினம் சிவபதமெய்தினர். அன்னர் பொற்கொடி அம்மாவின் அன்புக் கணவரும், நமசிவாயம்பிள்ளை (மாலைதீவு), சற்குணனந்தம் (யாழ். மா. ப. நோ. கூ. ச.), அருளானந்தம்(ஈழநாடு), விவேகானந்தம் (யாழ். அஞ்சலகம்), இராஜராஜேஸ்வரி (நீதிமன்றம், மன்னர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தகப்பனரும், நாகபத்மினி, பத்மலோசனி, வசந்தலோசனி, அனுஷா, அசோகன் (உரிமையாளர், நியூ அசோகன்ஸ் யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புமாமனரும், நகுலாம்பிகை, அரியரத்தினம் (கொழும்பு ஸ்ரூடியோ) ஆகியோரின், சிறிய தகப்பனரும், நடராசா, ஆனு, சாவன்னு, (கொழும்பு), பூலோகராணி, ஆகியோரின் மாமனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் (23-12-85) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றர் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (2561)

---

## மரணஅறிவித்தல்

### திரு. இராமநாதர் முத்தையா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், பதுளை ஆர். வைத்தியலிங்கம் லிமிட்டெட்டின் தலைவருமாகிய இராமநாதர் முத்தையா காலமாகிவிட்டார்.

இவர் ஞானம்மாவின் அருமைக்கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை, வைத்தியலிங்கம், திருமதி வேலாயுதர், திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி 'சிவராசா' அவன்யூ 112ஆம் இலக்க இல்லத்தில் 22-12-85ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

112. சிவராசா அவென்யூ,
திருநெல்வேலி. [2558]

---

## மரண அறிவித்தல்

### திரு. வே. வீரகத்திப்பிள்ளை (V. V)

காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை [மலேயன் பென்சனியர்] திருமதி மங்கையற்கரசி வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், முன்னள் கிறீன்லேஸ் வங்கி உத்தியோகத்தரும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கனகசபாபதி, கனகேஸ்வரி, கமலாதேவி, சுபத்திரை ஆகியோரின் அருமைச் சகோதரரும், Dr. ஜெகநாதபிள்ளை, கனகசபை, நித்தியானந்தராசா, சிவானந்தராசா, மகாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற M. சபாபதிப்பிள்ளை, திருமதி சபாபதிப்பிள்ளை [இராசாத்தி] ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [22-12-85] முற்பகல் 11-00 மணிக்கு இல. 41, சீனிவாசகம் வீதி, கொட்டடியில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக வில்லூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றர், றவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கனகசபாபதி

[2559)